235

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸஸ்ரு ஆவணிமீ [ஸஞ்சிகை 7.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஆவணி மாஸம்.**

இந்த ப்ரபஞ்சத்துக்கு ஸ்ராவணமாஸம் பரமபாவநத்தைத் தந்தது. கீதையைப் படித்துப் பின் ஏனையோர் மதக்ரந்தங்களையும் படித்துக் கீதாம்ருதம் அளித்தவனைப் போல் மநுஷ்ய லோகத்தில் சரீரமெடுத்த மற்றொருவனை நினைக்கற்பாலதோ? நினைப்பாருளர். உளரேல் அவர் புத்தி பயன்பட்டதன்று. எம்மட்டுந்தான் மர்த்யன் மர்த்யர்க்கு உதவுவான்? அம்ருதனான அம்ருதப்ரதன் அருளின்றி மர்த்யன் அம்ருதனாக வொண்ணுமோ? சேதநன் அசேதநங்களுக்கு உட்பட்டுத் துக்காநுபவம் செய்கையில், "இவ்வண்ணம் யானும் மற்றோரும் என் பிறந்தோம்? என் வருந்துகின்றோம்?" என நினைத்தல் விடாது. அசேதநம் உளதென்றால், சேதநன் அறியத்தான் அது உளது. அதன் அஸ்தித்வத்தை நிலையாக வெண்ணி, அதன் விஜ்ஞாதாவை இறப்பொடும் நசிப்பதாக வெண்ணுவோர் உலகத்துக்கு நல்வழி காட்டுவோர் ஆவரோ? "விஜ்ஞாதா

நசிப்பனோ? நசியானோ? யாமது அறியவல்லோமல்லோம். இங்கிருந்து ஸுகப்படும் வழி தேடுவோம்" என்பார் மிகுந்த திவ்வுலகு.

இதனால் நமது முடிவென்னென்றால், லோகஸங்க்ரஹத்துக்காக வாயினால் மாத்ரம் தமது ஆத்மாக்களையும், அவற்றின் ஸ்வாமியையும் ஒப்புக்கொண்டு, ஒழுக்கத்தால் அவ்விச்வாஸ மற்றவரென நின்றவரை அவ்வகுப்பில் தான் சேர்க்கவொண்ணும். இங்கு ஸுகப்படும் வழியைத் தேடாதவர் ஆயிரத்தி லொருவர் உண்டோ? இவர், பரமனை யடிபணிந்து சிற்றின்ப மிழந்தா லென்செய்வோ மெனப் பயந்த கற்றறிமூடர் மிகுகின்ற காலமிது. இவர் கண்களுக்கு முன்னம் கண்ணன் அகலாமல் நின்றாலொழிய அவனை அவர் நம்பார். மநுஷ்யர்க்கு ஐஹிக ஸுகங்களைத் தேடும் போதமும் வேண்டுமோ? அதைத் தேடுதல் அவர் ஸ்வபாவத்திலமைந்ததன்றோ? உலகமெங்கும் ஒருவர்க்கொருவர் உதவிக்கொண்டு, யாவரும் பசியாமல் வேண்டிய அளவு சுவைத்த உண்டி அருந்தவும், சரீரங்களில் ரோகமின்றி வன்மை பெருகவும், ஸ்த்ரீ புமான் சேர்க்கையால் உண்டாகும் ச்ருங்காரஸுகம் சக்தியுள்ளவரையில் அநுபவிக்கவும், கண்ணுக்கேற்ற ஆடைகளும் அணிகளும் இயன்றமட்டும் தரித்து ஸந்தோஷிக்கவும், வேடிக்கையாய்க் கூடவும், பேசவும், சிரிக்கவும், பாடவும், ஆடவும், இவ்வுலகம் பரிணமிக்கவேண்டுமென எண்ணங்கொண்ட நம்மவர்க்கு, மர்த்யர் தன்மை மாறுபடாதென்றும், இவ்வித முயற்சிகளை உலகத்தோர் விடமாட்டாரென்றும், அவற்றின் இன்றியமையாத முடிவை ஐரோப்பாவின் போர்க்களங்களில் பாரீரெனவும் சொல்கின்றோம். "பரலோகத்தை நாம் மறுத்திலோம்; பரலோகமென இவ்வுலகத்தைச் செய்ய முயல்வோம்" என்பாரு முண்டு. ஸசரீரர்களுடைய இவ்வுலகம் அசரீர்களுடைய அவ்வுலகமென எவ்வண்ணம் ஆகும்? அங்கும் முக்தர் சரீரவான்க ளாகின்றாரெனில், அது கர்மவச்ய சரீரமன்று; இச்சையால் க்ரஹிக்கத்தக்கது. ஆதலால், இவ்வுலகில் ராஜதர்மமாக ஏற்பட்டதும் ஜந்மம், வ்ருத்தி, ஜரை, மரணம் முதலிய விவகாரங்களுக் குள்ளடங்கிய சரீரவான்களான ப்ரஜைகளின் க்ஷேமத்தைப் பெருக்குவதுமான முயற்சிகள் ராஜாங்கத்தாராலும், ஏனையோராலும் செய்யப்படுவதை யாம் நிந்திக்கின்றோமில்லை. ஆனால் இவற்றை எக்காலும் வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்துக்கொண்டு, மனோவாக்குகளின்

வ்யாபாரங்களினின்று, மாயனை மன்னும் வடமதுரைமைந்தனைத் தூயப்பெருநீர் யமுனைத்துறைவனை ஒழித்தல் ச்ரேயஸ்கரமோ? ஆதலால் ஆழ்வார் பாசுரத்தை நினைத்தல் வேண்டும்.

"இன்றுசாதல் நின்றுசாதல் (இவை) அன்றி யாரும் வையகத்து, ஒன்றி நின்று (அதாவது நிலைத்து) வாழ்தலின்மை கண்டு நீச ரென்கொலோ, அன்று பாரளந்த பாதபோதை (அதாவது, திருவடித்தாமரையை,) யொன்றி வானின்மேல், சென்று சென்று தேவராய் (அதாவது நித்யஸூரிகளால்,) இருக்கிலாத வண்ணமே"?

இப்படி நாம் நினைக்கப்பெற்றால், குலசேகரன் சொல் நன்கு மனம்படும். அதெங்ஙனமென்றால்,

"மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளுமிவ்
வையந் தன்னொடுங் கூடுவ தில்லையான்
ஐயனே! அரங்கா! வென் றழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந் தேனென்றன் மாலுக்கே."

"மார னார்வரி வெஞ்சிலைக் காட்செயும்
பாரி னாரொடுங் கூடுவ தில்லையான்
ஆர மார்வ னரங்க னனந்தன் நல்
நார ணன்நர காந்தகன் பித்தனே
உண்டி யேயுடை யேயுகந் தோடுமிம்
மண்ட லத்தொடுங் கூடுவ தில்லையான்
அண்ட வாணன ரங்கன்வன் பேய்முலை
உண்ட வாயன்றன் உன்மத்தன் காண்மினே".

இங்ஙனம், பகவானிடம் ப்ரேமைகொண்டு நடத்தலால் பித்தன் போன்றும், உன்மத்தன் போன்றும், அநந்ய சித்தமுடையவராய் ஸர்வேச்வரனைப் பற்றினர் மஹாத்மக்கள். முன் ஆத்ம சௌர்யம் செய்தவரானாலும்,

'दुराचारोऽपि सर्वाशी कृतघ्नो नास्तिकः पुरा ।
समाश्रयेदादिदेवं श्रद्धया शरणं यदि ॥
निर्दोषं विद्धि तं जन्तुं प्रभावात् परमात्मनः'।

எனும் வண்ணம், பழைய மார்க்கத்தைத் துறந்து, பரமனை நம்பி, அவன் பாதங்களில் சரணம் புகுந்தவரை, அவன் தோஷமற்றவ

ராக்குவனன்றோ? ஆதலால் கலியனும், (முன்காலம்) “கள்வனேனானேன் படிறுசெய் திருப்பேன் கண்டவா திரிதந்தே னேலும், (இப்போது) தெள்ளியே னானேன் செல்கதிக் கமைந்தேன் சிக்கெனத் திருவருள் பெற்றேன், உள்ளெலா முருகிக் குரல் தழுத் தொழிந்தேன் உடம்பெலாங் கண்ணநீர் சோர, நள்ளிருளளவும் பகலும் நான் அழைப்பன் நாராயணாவென்னும் நாமம்” என்றருளிச் செய்தாரிறே.

இத்தகைய பக்தியெனும் மஹாநதியை நமது நாடெல்லாம் பெருகியோட அளித்த மாதவன் திருவவதாரத்தைக் கொண்டது இந்த ச்ராவணமாஸம். தேவகியும் வஸுதேவரும் பக்திசெய்த படி யென்ன, யசோதை பக்திசெய்தபடி யென்ன, ஆய்ச்சியர் மனமுருகிக்கொண்ட காதலென்ன, அர்ஜுனன் பண்ணின ஸ்நேகமென்ன, பீஷ்மர், விதுரர் முதலானோர் கொண்ட பக்திரூபமான ஜ்ஞாநமென்ன, உத்தவர், அக்ரூரர் இவர்கள் செய்த பக்தியென்ன, வேதவ்யாஸர், சுகர் இவர்கள் பண்ணின ஸாக்ஷாத்காரமென்ன, ஆழ்வார்களுடைய விவித அத்புதமான அநுபவமென்ன, கௌராங்கன் முதலான பக்தஸமாஜத்தாரின் ப்ரேமையென்ன, இவ்வளவுக்கும் இடங்கொடுத்து, இன்னும் எவ்வளவுக்கும் எட்டாத மஹத்வத்தை யணிந்த எம்பெருமான் அவதாரத்தையும் திவ்ய சேஷ்டிதங்களையும் உன்னாத கன்னெஞ்சரும் உளரென்றால், ஸித்தையாயும், அஸித்தையாயும், ரக்தையாயும், தன் வலையில் சிக்கிய ஜீவன்களுக்குச் சிற்றின்பங்களைக் கறக்கின்றவளுமான அஜையினுடைய ப்ரபாவம் அது. அதனால்தான் ‘மம மாயா துரத்யயா’ என்றருளிச்செய்தனன். பகவானை அடையும் மார்க்கம் ஒன்றன்று. மநுஷ்யர் ஸ்வபாவம் பேதிக்கும் வண்ணம் அதுவும் பேதித்து நிற்கும். அதனால்தான் ‘யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்’, என்று அவன் அருளிச்செய்தான். இந்த உண்மையை அறிந்தவர்க்கன்றோ அவன் அவதார உண்மை தெரியப்போகின்றது.

பகவான் அவதரிக்கும் ஸமயத்தை இவ்வண்ணம் வர்ணிக்கப் பட்டிருக்கின்றது :—

“அத ஸர்வகுணோபேத: கால: பரமஶோபந: ।
யர்ஹ்யேவாஜநஜந்மர்க்ஷம் ஶாந்தர்க்ஷக்ரஹதாரகம் ॥

𑌦𑌿𑌶𑌃 𑌪𑍍𑌰𑌸𑍇𑌦𑍁𑌰𑍍𑌗𑌗𑌨𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑍋𑌡𑍁𑌗𑌣𑍋𑌦𑌯𑌂 ।
𑌮𑌹𑍀 𑌮𑌂𑌗𑌲𑌭𑍂𑌯𑌿𑌷𑍍𑌠𑌪𑍁𑌰𑌗𑍍𑌰𑌾𑌮𑌵𑍍𑌰𑌜𑌾𑌕𑌰𑌾 ॥
𑌨𑌦𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌸𑌲𑌿𑌲𑌾 𑌹𑍍𑌰𑌦𑌾 𑌜𑌲𑌰𑍁𑌹𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌲𑌿𑌕𑍁𑌲𑌸𑌨𑍍𑌨𑌾𑌦𑌸𑍍𑌤𑌵𑌕𑌾 𑌵𑌨𑌰𑌾𑌜𑌯𑌃 ॥
𑌵𑌵𑍌 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌸𑍁𑌖𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌵𑌹 𑌶𑍁𑌚𑌿𑌃 ।
𑌅𑌗𑍍𑌨𑌯𑌶𑍍𑌚 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾 𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌸𑌮𑌿𑌨𑍍𑌧𑌤 ॥
𑌮𑌨𑌾𑌂𑌸𑍍𑌯𑌾𑌸𑌨𑍍 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾𑌨𑌿 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾 𑌮𑌸𑍁𑌰𑌦𑍍𑌰𑍁𑌹𑌾𑌂 ।
𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍇𑌜𑌨𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌦𑍁𑌰𑍍𑌦𑍁𑌨𑍍𑌦𑍁𑌭𑌯𑍋 𑌦𑌿𑌵𑌿 ॥
𑌜𑌗𑍁𑌃 𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾 𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍁𑌵𑍁𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌚𑌾𑌰𑌣𑌾𑌃 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌰𑍍𑌯𑌶𑍍𑌚 𑌨𑌨𑍃𑌤𑍁 𑌰𑌪𑍍𑌸𑌰𑍋𑌭𑌿𑌃 𑌸𑌮𑌂 𑌮𑍁𑌦𑌾 ॥
𑌮𑍁𑌮𑍁𑌚𑍁𑌰𑍍𑌮𑍁𑌨𑌯𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌸𑍁𑌮𑌨𑌾𑌂𑌸𑌿 𑌮𑍁𑌦𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌮𑌨𑍍𑌦𑌂 𑌮𑌨𑍍𑌦𑌂 𑌜𑌲𑌧𑌰𑌾 𑌜𑌗𑌰𑍍𑌜𑍁𑌰𑌨𑍁𑌸𑌾𑌗𑌰𑌂 ॥
𑌨𑌿𑌶𑍀𑌥𑍇 𑌤𑌮𑌉𑌦𑍍𑌭𑍂𑌤𑍇 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍇 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑍇 ॥
𑌦𑍇𑌵𑌕𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁 𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌹𑌾𑌶𑌯𑌃 ।
𑌆𑌵𑌿𑌰𑌾𑌸𑍀𑌦𑍍𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑍀𑌨𑍍𑌦𑍁𑌰𑌿𑌵 𑌪𑍁𑌷𑍍𑌕𑌲𑌃 ॥

𑌤𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 𑌬𑌾𑌲𑌕𑌮𑌮𑍍𑌬𑍁𑌜𑍇𑌕𑍍𑌷𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂 𑌶𑌂𑌖𑌗𑌦𑌾𑌦𑍍𑌯𑍁𑌦𑌾𑌯𑍁𑌧𑌂 । 𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌗𑌲𑌶𑍋𑌭𑌿𑌕𑍌𑌸𑍍𑌤𑍁𑌭𑌂 𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑌯𑍋𑌦𑌸𑍌𑌭𑌗𑌂 ॥ 𑌮𑌹𑌾𑌰𑍍𑌹𑌵𑍈𑌦𑍂𑌰𑍍𑌯𑌕𑌿𑌰𑍀𑌟𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌤𑍍𑌵𑌿𑌷𑌾 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑍁𑌨𑍍𑌤𑌲𑌂 । 𑌉𑌦𑍍𑌦𑌾𑌮𑌕𑌾𑌞𑍍𑌚𑍍𑌯𑌂𑌗𑌦𑌕𑌂𑌕𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌰𑍋𑌚𑌮𑌾𑌨𑌂 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵 𑌐𑌕𑍍𑌷𑌤 ”॥

“பகவானிடம் உத்பந்நரான சதுர்முகனுடைய நக்ஷத்ரமான ரோஹிணியானது, அநுகூலமாய் நின்ற அஶ்விநி முதலான நக்ஷத்ரங்களுடனும், ஸூர்யன் முதலான க்ரஹங்களுடனும், இதர நக்ஷத்ரங்களுடனும் கூடி நிற்கவும், திக்குகள் ப்ரஸந்நமாயிருக்கவும், நிர்மலமான நக்ஷத்ரோதயத்துடன் ஆகாஶம் விளங்கவும், பட்டணங்கள், க்ராமங்கள், கோஷ்டங்கள் இவைகள் க்ஷேமம் பொருந்தப் பூமி நிற்கவும், நதிகளில் தெளிந்த ஜலம் ப்ரவஹிக்கவும், மடுக்கள் தாமரைமலர்கள் சோபையைத் தாங்கவும், வநங்களில் வ்ருக்ஷபங்க்திகளின் பூங்கொத்துகள் எங்கும் பக்ஷிகளும்

வண்டுகளும் சப்தித்துக்கொண்டிருக்கவும், வாயு தூளியின்றியும் ஸுகந்த ஸுகஸ்பர்சத்துடனும் ஸஞ்சரிக்கவும், த்விஜர்களுடைய மந்தமாய் நின்ற அக்நிகள் மிகவும் ஜ்வலிக்கவும், ஸாதுக்களுடையவும், தேவர்களுடையவும், சித்தங்கள் ப்ரஸந்நமா யிருக்கவும், அந்தப் பகவான் அவதரிக்க அபிமுகனாய் இருக்க, ஸ்வர்க்க லோகத்தில் துந்துபிகள் முழங்கவும், கிந்நரர்களும் கந்தர்வர்களும் பாடவும், ஸித்தர்களும் சாரணர்களும் ஸ்துதிக்கவும், வித்யாதர ஸ்த்ரீகள் அப்ஸரஸ்ஸுகளுடன் கூடி ஸந்தோஷத்துடன் ஆடவும், முனிவர்களும் தேவர்களும் களிப்புடன் கூடிக் குஸுமங்களை நாற்புறமும் இறைக்கவும், மேகங்கள் ஸமுத்ரத்தை அநுஸரித்து மந்தமாகக் கர்ஜிக்கவும், அர்த்தராத்ரியில் இருள் மிகுந்து நிற்கப் பகவான் அவதாராபிமுகனாய் நிற்க, ஸர்வ குணங்களுடன் கூடிக் காலமானது பரமசோபதரமாயிருக்கையில் தேவதைபோன்ற தோற்றமுடைய தேவகீயினிடம், ஸர்வப்ராணிகளுடைய ஹ்ருதயங்களிலிருக்கும் விஷ்ணுவானவர், கீழ்த்திசையில் எல்லாக் கலைகளுடன் கூடிச்சந்த்ரன் உதிப்பதென ஆவிர்ப்பவித்தனர். தாமரைக் கண்களுடனும், சங்கசக்ர கதாபத்மங்களைத் தாங்கிய சதுர்புஜங்களுடனும், ஸ்ரீ வத்ஸமெனும் மறுவுடனும், கண்டத்தில் ப்ரகாசிக்கும் கௌஸ்துப மணியுடனும், பீதாம்பரதாரியாகவும், நீருண்டு கநீபூதமான மேகம்போல் வர்ணத்தால் ஸுந்தரமாகவும், விலையற்ற ரத்நங்களால் நிர்மிதமான கிரீடமென்ன, குண்டலங்களென்ன, இவற்றின் காந்தியால் வ்யாபிக்கப்பட்ட ஸங்க்யாதீதமான குந்தலங்களுடனும், ச்லாக்யமான அரைநூன்மாலை, தோள் வளையல், கங்கணங்கள் முதலான திருவாபரணங்களால் ப்ரகாசிக்கின்ற ஆச்சர்யமான அந்தக் குழந்தையை வஸுதேவர் கண்டார்."

மேலே விவரித்தவண்ணம், தேசமும், காலமும், சேதநாசேதநரூபமான ஸர்வ வஸ்துக்களும், பகவானுடைய அவதரணத்தை எதிர்பார்த்தவண்ண மிருக்கையில், ஸ்ரீக்ருஷ்ணன் அவதரித்தான். அவனுடைய திவ்ய சரித்ரவிஸ்தாரத்தை இங்கு எழுதப்போகின்றோமில்லை. அப்படிப்பட்ட அவதாரம் அந்யத்ர த்ருஷ்டமன்று. ஸர்வேச்வரனுடைய அவதரணம் இருக்கும் தன்மையை அவ்விடத்தில் காணலாமேயொழிய மற்றெங்கும் காண இசையாது. அந்த விஷயத்தைப்பற்றித்தான் இங்கே கிஞ்சித் யோசிப்போம்.

'𑌨 𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌕𑌿𑌂𑌚𑌨 ।
𑌨𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌮𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌰𑍍𑌤 𑌏𑌵 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿' ॥

"அர்ஜுநா! மூன்று லோகங்களிலும் ஸர்வேச்வரனன எனக்கு யாதொரு கர்த்தவ்யமும் இல்லை. ஏனெனில் என்னால் அடையத்தக்கதும், இதுவரையில் அடையாப்படாததும் யாதொன்றுமில்லை. ஆகிலும் லோகரக்ஷணவ்யாபாரமான கர்மங்களை அநுஷ்டிக்கின்றேன்."

'𑌯𑌦𑌿 𑌹𑍍𑌯𑌹𑌂 𑌨 𑌵𑌰𑍍𑌤𑍇𑌯𑌂 𑌜𑌾𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃 ;
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥
𑌉𑌤𑍍𑌸𑍀𑌦𑍇𑌯𑍁𑌰𑌿𑌮𑍇 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚𑍇𑌦𑌹𑌂 ।
𑌸𑌂𑌕𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌹𑌨𑍍𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃' ॥

"ஆலஸ்யமின்றிக் கர்மம் செய்யாமல் நான் எப்போதாவது இருப்பேனாகில், ச்ரேஷ்டனென மதிக்கப்பட்ட எனது மார்க்கத்தை மநுஷ்யர் ஸர்வப்ரகாரத்தாலும் அநுவர்த்திப்பர். லோகரக்ஷணார்த்தம் நான் செய்யவேண்டிய கர்மங்களை நான் செய்யாமல் விட்டால், இந்த லோகங்கள் நஷ்டமாய்ப்போகும். ப்ரஜைகளின் அநுக்ரக நிமித்தம் ப்ரவ்ருத்தனான நான் லோகஸாங்கர்யத்தைச் செய்தவனாய்க்கொண்டு இந்த ப்ரஜைகளையும் நாசம் செய்தவனாவேன்."

'𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍋 𑌯𑌥𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑌕𑍍𑌤𑌶𑍍𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌰𑍍𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌂 ॥
𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌂 𑌜𑌨𑌯𑍇𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌗𑌿𑌨𑌾𑌂 ।
𑌜𑍋𑌷𑌯𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌸𑌮𑌾𑌚𑌰𑌨𑍍' ॥

"ஆத்மாவைப்பற்றின ஸம்யக்ஜ்ஞானமற்றவர் கர்மங்களில் பற்றுடையவராய் எப்படி அவற்றைச் செய்கின்றனரோ, அப்படியே, ஓ அர்ஜுநா! வித்வானானவன், லோகஸங்க்ரஹம் செய்ய இச்சித்தவனாய்க் கொண்டு, கர்மங்களில் பற்றையொழித்து அவற்றைச் செய்யக்கடவன்; அவன் கர்மத்தில் ஸங்கமுடைய ஆத்ம ஸ்வரூப விவேகமற்றவர்க்கு அக்கர்மங்களில் அவிச்வாஸம் உதிக்கும்படிப் புத்திபேதத்தை உண்டாக்கத்தகான். வித்வான் கர்மயோக நிஷ்டனாக இருந்துகொண்டு ஸர்வ கர்மங்களையும் தானே அநுஷ்

டித்து அஜ்ஞர்க்கு அவற்றுள் ப்ரீதியை உண்டு பண்ணக்கடவன்-''
இந்த ரூபமாக ஸ்ரீக்ருஷ்ணன் வசநமிருக்கின்றது.

இதன் தாத்பர்யம் என்னெனில், ஸர்வேச்வரன் அவாப்த ஸமஸ்த காமனுயிருந்தும், லோகாநுக்ரஹார்த்தம் ஜகத்வ்யா பாரத்தை விடாமல் நடத்துகின்றான்; அவன் அவதாரம் செய்யும் காலங்களிலும், லோகஹிதத்தில் ஸதா ப்ரவ்ருத்தனுய் அந்தந்த அவதார சரீரங்களுக்கு ஸந்நிஹிதமான கர்மங்களை லோகோப காரமாகச் செய்கின்றான்; அப்படிக்கு அவன் செய்யாவிட்டால், லோகஸாங்கர்யமும் ப்ரஜைகளின் நாசமும் ஏற்படும்; ஆதலால், ஆத்மஸ்வரூப ஜ்ஞாநமுள்ளவர்களும், அந்த ஜ்ஞாநத்வாரா பகவத் பக்தி பண்ணுகின்றவர்களும், அந்த ஜ்ஞாநத்தையும் பக்தியையும் ஈஷத்தும் துறக்காமல் கர்மயோகநிஷ்டராக நின்று ஸந்நிஹித கர்மங்களை த்யாகபுத்தியுடன், ஸங்கமுள்ளவர் செய்வதுபோல் செய்து, பகவதர்ப்பணம் பண்ணக்கடவர்; அப்படி அவர் செய்யும் பக்ஷத்தில், அவருடைய நிஷ்டைக்கும் குறைவில்லை; கர்மத்யா கத்தில் அதிகாரமற்ற பஹுஜநங்களும் லோகம் தழைப்பதற்கு ஆதாரமாயுள்ள அவ்வவர்க்கு நியதமான ஸர்வ கர்மங்களையும் விடாமல் செய்வர் என்பதுதான்.

ஸ்ரீக்ருஷ்ணன் இருந்தகாலத்தில் அவனைப்போல் வ்யாபார வானுக யாரும் இருந்ததில்லை. அஹங்கார மமகார மெனப்பட்ட அஜ்ஞாநத்தால் புத்திகெட்ட கம்ஸன், ஜராஸந்தன், சிசுபாலன், நரகன், பாணாஸுரன், துர்யோதநன் முதலான பல ராஜர்கள் மிகவும் அதர்மங்களில் ப்ரவ்ருத்தராய்ப் பரஹிம்ஸாரூபமான க்ரியைகளைச் செய்வித்த அக்காலத்தில், ஸ்ரீக்ருஷ்ணன், நேராக வும், இதரர்களை நிமித்தமாகக்கொண்டும், லோகஹிம்ஸகர்களை நிரஸித்தும், ஸாதுபரித்ராணம் செய்தும், இந்த லோகத்தார்க்கு சாச்வதமான ப்ரேபஸ்ஸுக்குக் காரணமாயுள்ள தனது திவ்ய சரித்ரத்தைத் தந்தும், வ்யாபாரவானுக இருந்தான். தனது நிரங் குசமான ஐச்வர்யத்தைக் கொஞ்சமும் விடாமலும், ஸர்வசக்தி மானுன தான் ஸர்வநியந்தாவாக இருக்கையிலும், அஹங்கார விமூடாத்மாக்கள் தாம் கர்த்தாக்களென நினைக்கக் குறையின்றி ஜகந்நியமநத்தை நடத்துவதுபோல், தன் காலத்திய ராஜர்களும் வீரர்களும் தமதெனக் கர்மங்களை அபிமாநித்துச் செய்ய இடங்

தந்து, தானே யாவத்தையும் நடப்பித்தான். அவர்க்குள் ச்ரேஷ்டனை அர்ஜுநனைப் பார்த்து 'நிஸ்த்ரைகு³ண்யோ ப⁴வார்ஜுந' என்றருளிச்செய்தானிறே. இதனுல் பகவானுடைய திருவுள்ளம் தன் பக்தர் நிஷ்காம கர்மாநுஷ்டாநம் செய்யவேண்டுமென்பதே. அப்படிப் பகவான் கர்மவானுக இருக்கையில், இச்சாத்வேஷம் முதலான த்வந்த்வ மோஹங்களால் அவனது உள்ளம் சிறிதும் கலங்கியதன்று. அவனுக்கு எத்தருணமும் கோபமில்லை; வ்யஸநமில்லை; ஒன்றைப்பற்றி இச்சையில்லை; த்வேஷமுமில்லை. 'ஸமோऽஹம் ஸர்வபூ⁴தேஷு' என்று அவன் சொன்னபடி ஸர்வஸமனுகவே யிருந்தான். பாரத சரித்ரம் முழுவதும் பார்க்கில், அவனுக்குக் கோபம் வரத்தக்க அவஸரங்கள் பலவுண்டு; வ்யஸநம்உண்டாகத்தக்கவை பலவுண்டு. லோக விடம்பநார்த்தம் சில உக்திகளோ, வ்யாபாரங்களோ, அவனுல் செய்யப்பட்டபோதிலும், சித்தகாலுஷ்யம் அவனுக்கெப்போது மில்லை யென்பது அவனது சரித்ரத்தைச் சிந்திப்போர்க்கு ஸ்பஷ்டமாய் விளங்கும். ஸ்வயம் யாதொரு ப்ரயோஜநத்தையும் அபேக்ஷிக்காமல் பரோபகார நிமித்தமாகவும், தர்மத்தைக் காக்கும்பொருட்டும், ஸதா வ்யாபாரவனுயிருந்த பகவான், தன் பக்தர்களும் யதோசிதம், தன்போல் க்ரியாவான்களாயிருக்க வேண்டுமென்பதைக் கீதையினுல் காட்டியருளினுன். அவனிடம் மஹாப்ரேமை கொண்ட கோபீஜநங்களும் அவர்போன்ற மற்ருேரும் ப்ரவ்ருத்திமார்க்கத்தை அவலம்பிக்க இடமில்லை. ஆழ்வார்களும் இந்தக் கோஷ்டியில் சேர்ந்தவரே. உபநயநமின்றித் துர்யாச்ரமம் பெற்ற ஸ்ரீசுகர்க்கு யாது க்ரியை பொருந்தும்? இப்படி நிவ்ருத்திமார்க்க நிஷ்டரைப் பகவான் கீதையில் புகழ்ந்தாரே யன்றி நிந்தித்தாரில்லை. ஆனுல், நிவ்ருத்திமார்க்கத்துக்கு அதிகாரிகள் மிகவும் குறைந்தவர் ஆதலால், ப்ராயேண, 'நஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்ட²த்யகர்மக்ருத் । கார்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர் கு³ணை:'॥ என்று அவன் ஸாதித்த ப்ரகாரம், யாவரும் ப்ரவ்ருத்திமார்க்காதிகாரிகளாதலால், அவர்கள் க்ஷேமப்படும் மார்க்கத்தைத் தன் சரித்ரத்தாலும், உபதேசங்களாலும் காட்டியருளி, மோக்ஷமார்க்கமென்று விதிக்கப்பட்ட உபாயங்களில் அநதிகாரிகளுக்குத் தன் திருவடிகளில் சரணுகதியையும் உபதேசித்தருளினுன்.

ததாபி வேதாந்தீயஸ்ய தஸ்ய ஸுஸேவ்யஸ்ய, ஸாதநம் ஸாதி மோக்ஷஸ்ய ஸாதகம் ஸாதநாம்' என்று, ஒரு பக்தன் பாலனைப் பகவானை நினைத்துப் பக்திசெய்தான். குழந்தையாய் எண்ணி யசோதை பகவத்கைங்கர்யம் செய்தாள். காந்தனைய் கோபஸ்த்ரீகள் நினைத்து நினைத்து உருகினர்கள். புத்ரனைய் எண்ணினர்கள் தசரதர், வஸுதேவர், கௌஸல்யா, தேவகீ இவர்கள். ஸகாவாய் அர்ஜுநன் நினைத்தான். ஸ்வாமியாயும் ஸர்வேச்வரனையும் பரர் எண்ணிப் பக்தி பண்ணினர்கள். அர்ஜுநனும் உத்தவரும் ஆசார்யனைய்க் கொண்டார்கள். இந்த விஷயத்தில், 'ஸகீவ ப்ரிய ஹிதகாரம் ஜநநீவ ஸ்நேஹய: । ஆசார்யம் ஶிஷ்யவச் சித்ரம் சித்ரவச் சாஸ்தா ஹஸிம் ॥ ஸாத்⁴வீவ ந ஸுஹ்ருதே³வ ந மாதே³வ ந வ ஸவத்ரா । விது³ஷேவ ததா² ஹாஸ்யே ராதா⁴ஸேவ நவராயவ: ॥ யதா² யுவாநம் ராஜாநம் யதா²வ தேஜஸ்விநம் । யதா² ப்ரியாதிதி²ம் பொஷ்யம் ஹம்ஸம் ததா²வ பூஜ்யேச ॥ யதா²வ புத்ரம் த³யிதம் தமேவ வாவ வந்தேச ஹாஸிம்' ॥ எனும் ச்லோகங்களை எடுத்துரைத்து, அவற்றில் காட்டிய ஸம்பந்தங்களுக்கேற்றபடி, அவனிடம் பரத்வத்தையோ, ஸௌலப்யத்தையோ, ஸ்நேஹத்தையோ, காமத்தையோ, ப்ரேமையையோ, பக்தியையோ பண்ணி, அவற்றிற்கு அநுரூபமான வ்ருத்தியை க்ருதக்ருத்யர் பண்ணத்தக்கவரென்று தேசிகன் ஸாதித்தருளினர். இவ்விதமாக லோகத்தைப் பரிபூர்ணமாக அநுக்ரஹிக்கக் கருதிப் பரிபூர்ணவதாரம் செய்தருளிய புருஷோத்தமனை ஒவ்வொரு முஹூர்த்தமும் க்ஷணமும் நாம் ஸ்மரிக்கவேண்டியிருக்க, இம்மாஸத்தை அதற்காக ப்ரத்யேகமாகக் குறிப்பானேன் என்றால், த்ருணதுல்யமான அர்த்தார்ஜநத்திலும் ஐஹிகபோகங்களிலும் இழிந்த பாமரர் மிகுந்த காலத்தில், அந்த மாஸம் அவனது அவதார மாஸமானபடியால், அதுவாகிலும் அவன் ஸ்மரணார்ஹம் ஆகவேண்டுமெனும் உத்கடேச்சையால் யாம் இது எழுதத் துணிந்தோம்.

*  *  *  *  *  *

திலக் வித்வான் எழுதிய கீதா ரஹஸ்யம்.

திலக் என்னும் மஹாராஷ்ட்ர வித்வானும் தேசாபிமானியுமான மஹான் கீதாரஹஸ்யமென்றொரு க்ரந்தத்தை மஹாராஷ்ட்ர பாஷையில் எழுதி வெளிப்படுத்தியிருக்கின்றார். அது நாம் அறிந்ததோர் பாஷையில் இல்லாத காரணத்தைப்பற்றி வ்யஸநமுறுகின்றோம். அவ்வண்ணம் வ்யஸநங்கொள்பவர் ஸங்க்யை அநந்தமாயிருக்கும். விஷய ஸாத்ருஶ்யத்தாலும், ஶப்தப்ரயோக ஸாத்ருஶ்யத்தாலும், கீதையை எழுதினவர் மஹாபாரதத்தை எழுதினவரேயென்று அவர் நிச்சயம் செய்ததுமன்றி, கீதை எழுதப்பட்ட காலம் 2,400 வருஷங்களுக்கு முன்னெனவும் ஸித்தாந்தம் செய்திருக்கிறார். பாகவத தர்மம் புத்தர் காலத்துக்கு முற்பட்டதென்பதை நம் ஸம்ப்ரதாயஸ்தர் விஶ்வஸித்திருக்கின்றனர். அதைத் திலக் வித்வான் ஸ்திரப்படுத்திக் கீதையில் உபதேசரூபமாக ப்ரஶம்ஸிக்கப்பட்ட நிஷ்காமகர்மமெனும் கர்மயோகம், வேதங்களில் கர்மகாண்டங்களில் எடுக்கப்பட்டு, ஈஶாவாஸ்யம் முதலான உபநிஷத்துகளால் ஸ்திரீகரணம் செய்யப்பட்டுப் பாகவத தர்மத்தால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கின்றதாக அவர் நிச்சயிக்கின்றார். பாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் பாகவத ஸம்ப்ரதாயத்துக்கு ஆதாரமாய் நிற்கின்றன. மஹாபாரதத்திலேயே 'பாஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம்' எனும் வசநத்தை யோசித்தால், அந்த ஸம்ஹிதைகளால் ஏற்பட்ட பாகவத ஸம்ப்ரதாயத்துக்குக் கீதாசார்யன் பரமாசார்யனாகின்றான். ஆதலால் பாஞ்சராத்ரம் மஹாபாரதத்தில் மோக்ஷதர்மத்தில் மிகவும் ப்ரஶம்ஸிக்கப்பட்டு, ப்ரஹ்ம ஸூத்ரங்களிலும் யோசிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், கீதா ஶாஸ்த்ரத்துக்கும் பாகவத தர்மத்துக்கு ஸாத்ருஶ்யம் அநிவார்யம். இந்த அம்ஶங்களை ஆதுநிகர் ப்ராயேண கவனிக்கின்றாரில்லை. கீதை கர்மயோக ஸ்தாபநார்த்தம் உண்டாயிருக்க, நிவ்ருத்தி மார்க்கத்தை மிகவும் உபதேசித்த கிறிஸ்துவின் உக்திகளுக்கும் கீதாஶாஸ்தரத்துக்கும் ஒற்றுமையுண்டெடன உண்டாகும் ப்ரமையைத் திலக் கண்டிக்கின்றார். இவை யாவும், திலக் வித்வானெழுதிய க்ரந்தத்தைப் பராமர்ஶித்த ஒருவர் ஜூலைமீ ௨௰-ம் தேதி ஹிந்து பத்ரிகையில எழுதிய நிரூபணத்தைப் படித்து நாம் எழுதினோம்.

246

# தத்வவிசாரம்.

## ப்ரபத்தியின் ஸ்வரூபமும் ப்ரகாரங்களும்.

(தொடர்ச்சி.)

இந்த ப்ரபத்தியின் ஸ்வரூபத்தையும், இதன் அங்கங்களையும், இதன் அநுஷ்டாநப்ரகாரங்களையும் பரமேச்வரன் தன் முகமாய் உண்டான பாஞ்சராத்ரஸம்ஹிதைகளில் விஸ்தரேண விவரித்துளன். கீதையில் தான் விதித்த உபாயத்தின் விஸ்தாரங்களை ஸ்வயமே பாஞ்சராத்ர ஸம்ஹிதா மூலமாகக் காட்டியருளினன். அவற்றின் ஸாரங்களை நம் வேங்கடநாதார்யன் பல ரஹஸ்ய க்ரந்தங்களால் வெளியிட்டனர். அவை யாவும் குருமுகத்தாலறியத்தக்கவை. அவற்றுள் ஸர்வச்ரேஷ்டமானது ரஹஸ்யத்ரய ஸாரம். அதன் அர்த்தங்களை யாமிங்கு வெளியிடத் துணியோம். ஆகிலும், நிகமாந்தமஹாதேசிகன் வசநங்களில் சிறிதை இவ்விடம் எழுதத் துணிகின்றோம். அவ்வண்ணம் செய்வதில், தத்காலத் தமிழ் நடைக்குப் பொருந்த ப்ரதிபதங்களால் அந்தப் பரமாசார்யன் உக்திகளை எடுத்தெழுதுவோம். இவ்வுலகத்தில், தெய்வ வசத்தால் தீரனாய்ப் போந்த ஆயிரத்தில் ஒருபுருஷன், முதலில், அம்ருதம்போல் ரஸித்து, பரிணாமத்தில் விஷம்போல் தீங்கை உண்டாக்கும் பாஹ்யபதார்த்தங்களைப் பரித்யாகம் செய்தவனைக்கொண்டு, பகவதநுபவாபேக்ஷயா பரிமிதமான பலத்துடன் கூடின கேவலாத்மாநுபவ நிமித்தமும் ப்ரயாஸைப்பட இஷ்டமற்று, நிரதிசயமானதும், மஹாநந்தத்தைத் தருவதுமான ஸ்ரீயப்பதியினுடைய பரிபூர்ணாநுபவத்தில் அத்யந்த ப்ரீதியுடையவனாய், ஸம்ஸாரத்தை த்யஜிக்க இச்சைகொண்டவன் (முமுக்ஷு) ஆகின்றான். முமுக்ஷுக்கள் பரமபுருஷார்த்தத்தை அடைவதற்கு ஏற்ற உபாயங்களில் ப்ரவ்ருத்தராகின்றார். ப்ரபந்நரென்றும் பக்தரென்றும் அவர் இருவகைப்பட்டவர். இருவரையும் ப்ரபந்நர்

என்னலாம். ஏனெனில், ப்ரபத்தியை ஸாக்ஷாத் உபாயமாகக் கொள்பவன் அத்வாரக ப்ரபத்திநிஷ்டன் என்றும், பக்தியோக நிஷ்பத்தியின்பொருட்டு, அதனங்கமாக அதை அநுஷ்டிப்பவன் ஸத்வாரக ப்ரபத்திநிஷ்டன் என்றும் சொல்லப்படுவர். இரண்டு அதிகாரிகளையும் பக்தரெனவும் கூடும். ப்ரபந்நன் ப்ரபத்தி பலமாகப் பகவத் பக்தியை அபேக்ஷிக்கின்றான். அங்கப்ரபத்தியை அநுஷ்டிக்கும் பக்தியோகநிஷ்டன், ப்ரபத்தியின் ப்ரயோஜநமாகப் பக்தியோகமெனப்பட்ட மோக்ஷஸாதநமாகும் பக்தியை அபேக்ஷிக்கின்றான். இரண்டு உபாயமும் பகவத்ப்ரஸாதமூலமாகப் புருஷார்த்தத்தை ஸாதித்துக்கொடுக்கின்றன. ஏதேனுமொரு ப்ரகாரமாகவுமாகும், யாரேனுமொருவர் அநுஷ்டிக்கவுமாகும், ப்ரபத்திக்கல்லது ஸர்வேச்வரன் பரம புருஷார்த்தம் கொடுக்கவிரங்கான்.

'கீடபக்ஷிம்ருகா³: பக்ஷீவா யேவ வைஷ்ணவஸம்ஶ்ரயா:।
தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்³விஷ்ணோ: பரமம் பத³ம்'॥ என்றும்,
'தேவயம் ப⁴வதா ரக்ஷ்யா ப⁴வத்³விஷயவாஸிந:', என்றும், 'நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன்', என்றும், சொல்லுகிற பாகவதர்களுடைய அபிமாநம், திவ்யதேசவாஸம், நாமஸங்கீர்த்தநம், முதலானவை மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் உபாயங்கள் ஆகமாட்டா. அவற்றில் ஸம்பந்தித்த புருஷனை அவை, உபாஸநத்திலோ, ப்ரபத்தியிலோ, ப்ரவ்ருத்திப்பித்து அவற்றின் மூலமாகப் புருஷார்த்தத்தை அடைவிக்கும். பக்தி யோகத்தில் அகிஞ்சநனுக்கு அதிகாரமில்லை. பக்தியோகநிஷ்டன் அவனது ப்ராரப்தகர்மம் முடிந்தவளவில் அந்திம ப்ரத்யயத்துடன் சரீரத்தை த்யாகம்செய்து மோக்ஷத்தை அடைவான். ப்ராரப்தகர்மம், உபாஸநத்தில் அவன் அந்வயித்த ஜந்மத்திலோ, ஜந்மாந்தரத்திலோ, முடிவுறும். ஆதலால் மோக்ஷத்தைப்பெற, இப்படிப்பட்ட விளம்பத்தைப் பொறுக்காமல், உபாயாநுஷ்டாநம் பண்ணின உடனே, அந்தச் சரீராவஸாநத்திலோ, மோக்ஷத்தை அபேக்ஷிப்பவனுக்குப் பக்தியோகத்திலதிகாரமில்லை. ப்ரபத்தியில் யாவர்க்கும் அதிகாரமுண்டு; அது

ஸர்வ அநிஷ்டங்களையும் போக்கவல்லது; ஸர்வேஷ்டங்களையும் ஸாதித்துக் கொடுக்கும்; லகுவா யநுஷ்டிக்கத் தக்கது; ஒரே தரம் அநுஷ்டிக்க வேண்டியது; கோலின காலத்தில் பலம் தர வல்லது; யாதொன்றாலும் தகையக்கூடாதது; அதற்குரிய பலத்தைக் குறித்து மீண்டோர் உபாயத்தை ஸஹிக்காது. அதில் தனக்கு அதிகாரத்தை யறிந்து அதை உபாயமாகப் பற்றினவனுக்குப் பகவானுடைய பரிபூர்ணநுபவத்துக்கு ப்ரதிபந்தகம் இல்லை. 'ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித: | பக்திஶ்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி'|| "ஓ ராமசந்த்ர! அவதாரரூபத்தைத் தரிக்கும் உன்னிடம் எனது பரமஸ்நேஹமானது ஶாஶ்வதமாய் நிலைத்து நிற்கின்றது. ஹே வீர! உன்னிடம் எனது பக்தி அசஞ்சலமாய் இருக்கின்றது. இங்கேயே உனக்குப் பணிவிடை செய்துகொண்டு உன்னை யநுபவிக்கின்றேன். உனது பரஸ்வரூபாதிகளில் எனது மநஸ் செல்லவில்லை" என்று, இளையபெருமாள் ஸர்வலோகசரண்யன் பக்கல் விஜ்ஞாபநம் பண்ணிக்கொண்டவண்ணம், இந்தச் சரீரத்தோடு இருந்துகொண்டு கைங்கர்யம் பண்ணவேண்டுமென்கிற அபிஸந்திக்கு அநுகூலமாய் நிற்கும் அர்ச்சாவதாரஸங்கம். இந்தக் கைங்கர்யாபேக்ஷையாலன்றோ ப்ரபந்நன் தனது சரீராவஸாநபர்யந்தம் மோக்ஷம் விளம்பிப்பதை ஒப்புக்கொள்கின்றான்? ஆதலால் ப்ரபத்யநுஷ்டாநக்ஷணம் முதற்கொண்டு, இவ்வுலகில் ப்ராப்தமாகும் கைங்கர்யத்தை முதலாகவும், தேஹாவஸாநத்தில் பரிபூர்ணப்ரஹ்மாநுபவரூபமான மோக்ஷம் முடிவாகவும் இருக்கும் பலந்தான் ப்ரபத்யநுஷ்டாந பலம்.

'கிம் வா ஸர்வஜகத்ஸ்ரஷ்டு: ப்ரஸந்நே த்வயி துர்லபம்'| "ஸர்வஜகத்காரணனான நீ ப்ரஸந்நனாகில் என்ன தான் துர்லபம்?", 'தஸ்மிந் ப்ரஸந்நே கிமிஹாஸ்த்யலப்யம்'| "அவன் ப்ரஸந்நனாகில் கிடைக்காத தொன்றுண்டோ?", என்று சொல்லுகிறபடியே, ஸர்வேஶ்வரன் ஸகல பலப்ரதனாகையாலே, அவன் திருவடிகளில் பண்ணும் ப்ரபத்தியும் ஸகல பல ஸாதநமாகும். 'தாவதார்த்தி-ஸ்த

𑌞𑍍𑌚𑌾 𑌤𑌾𑌵𑌨𑍍𑌮𑍋𑌹𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑍁𑌖𑌂 । 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨 𑌯𑌾𑌤𑌿 𑌶𑌰𑌣𑌂 𑌤𑍍𑌵𑌾𑌮𑌶𑍇𑌷𑌾𑌘𑌨𑌾𑌶𑌨𑌂 ' ॥ "கோலின பலத்துக்கு ப்ரதிபந்தகமாய் நிற்கும் ஸர்வபாபங்களையும் நிவர்த்திக்கின்ற உன் திருவடிகளில் எது பர்யந்தம் சரணாகதி செய்கின்றானில்லையோ, அது பர்யந்தமே புருஷனுக்குத் துக்கம் (ஐச்வர்யத்தையிழந்த துக்கம்), அவ்வளவு பர்யந்தமே ஆசை (நூதநமான ஐச்வர்யத்தில் ஆசை), அவ்வளவு பர்யந்தமே மோஹம் (ஆத்மஸ்வரூப அஜ்ஞாநத்தாலுண்டாகும் மோஹம்), அவ்வளவு பர்யந்தமே அஸுகம் (பகவத் ப்ராப்தி விரோதமான ஸம்ஸாரம்) என்கிறபடியே, ப்ரபத்தி கோலின காலத்திலேயே ஸர்வ பலஸாதநமென்று மஹர்ஷிகள் அறுதியிட்டார்கள். இப்படிப்பட்ட ஏற்றத்தை நினைத்தே, "𑌸𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌰𑌤𑌾𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌃 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑌵𑌿𑌦𑌸𑍍𑌤𑌥𑌾 । 𑌨𑌾𑌰𑍍𑌹𑌨𑍍𑌤𑌿 𑌶𑌰𑌣𑌸𑍍𑌥𑌸𑍍𑌯 𑌕𑌲𑌾𑌂 𑌕𑍋𑌟𑌿𑌤𑌮𑍀𑌮𑌪𑌿 ॥" என்கிற ச்லோகத்தால், கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோக நிஷ்டர்களான சுத்த சரித்ரத்துடன் கூடினவர்கள், ப்ரபந்நனுடைய மஹிமையில் ஏகதேசத்துக்கும் தக்கவரல்லர் என்று சொல்லப்பட்டது. ப்ரபந்நன், "𑌪𑌾𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 𑌪𑌰𑍇 𑌪𑍁𑌂𑌸𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌬𑌨𑍍𑌧𑌨𑌃 । 𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑌤𑍁𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌸𑌹 𑌮𑍋𑌦𑌤𑍇" ॥ "தேஹாவஸாநத்தில், ஸர்வபந்தவிநிர்முக்தனாகிப் பரமபுருஷனுக்கே பரதந்த்ரனாய்ப் போந்து அகர்மவச்யனாகையாலே, நிகரற்ற ஸ்வதந்த்ரனாகிப் பகவானுடன் கூட ஸர்வகாமங்களையும் அநுபவிக்கின்றான்; அதாவது ஸர்வவிதகைங்கர்ய யோக்யனாகின்றான்" என்றும் சொல்லப்பட்டது.

இப்படி அபிமத பலமான பரமபுருஷார்த்தத்துக்கு உபாயமாக ந்யாஸவித்யையைப் பற்றுகிறவன், வேறு உபாயங்களை அபேக்ஷிக்கவேண்டாம். அவனுக்கு அந்த வித்யையில் அதிகாரம் இருக்கின்றபடியை அறியவேண்டும். அதிகாரமாவது உபாயாநுஷ்டாநத்தில் ஸாமர்த்யமும், அதனுடைய பலத்தில் அபேக்ஷையும். இவற்றுள் ஸாமர்த்யமாவது, சாஸ்த்ரார்த்தத்தை

அறிந்துகொள்வதும், அறிந்தபடி அதை அநுஷ்டிக்கவல்லமையும், பக்தியோகாதிகளில், சாஸ்த்ரம் அநுமித்தபடி ஜாதி குணங்கள் முதலான யோக்யதையுமாம். இவற்றை யுடையவனுக்கு ப்ரயோஜநமாக அநுவதிக்கப்பட்ட ஸாத்யம்தான் மோக்ஷமெனும் பலன். அப்பலனை ஸாதித்துக்கொடுப்பது அதனிமித்தமாக விதிக்கப்பட்ட சரணாகதி யெனும் உபாயம். இங்கே பக்தி யோகாதிகளைப்பற்றிச் சிந்திக்கின்றோ மில்லை. சாஸ்த்ரத்தினால் ப்ரபத்யதிகாரி அறிந்துகொள்ளவேண்டும் ஜ்ஞாநம், ஈச்வரனுக்கும் இவனுக்கும் உள்ள ஸம்பந்தஜ்ஞாநம்; அதாவது இவன் ஈச்வரனுக்கு சேஷபூதன் என்பதுதான்: இதனுடன், உபாயாந்தரங்களைப்பற்ற இவனுக்கு அதிகாரமில்லை யென்பதைக் காட்டும் ஆகிஞ்சந்யமும், அநந்யகதித்வமும் இவன் அறியவேண்டியவையே. ஆகிஞ்சந்யம் என்றால் உபாயாந்தரங்களைப்பற்ற இவனுக்கு ஜ்ஞாநமும் ஸாமர்த்யமும் இல்லாமை. ஜ்ஞாநமும் ஸாமர்த்யமும் இருந்த போதிலும், உபாயாந்தரங்களைப் பற்றுவதால் பரமபுருஷார்த்தமாகிற பலம் விளம்பிக்கும் எனும் ஜ்ஞாநம் இவனுக்குண்டாகி, அந்த விளம்பத்தை ஸஹியாததால், கடுகப் பலம் பெறுவதற்கு ப்ரபத்தியைப் பற்றும்போது இவனுக்கு அநந்யகதித்வம் ஸித்திக்கின்றது. அநந்யகதித்வ மென்பதில் கதிசப்தம் அடையவேண்டுகின்ற பலமென்றர்த்தம். இப்பலம் தவிர, ப்ரயோஜநாந்தரங்களில் இவன் விமுகனாக நிற்கை அநந்யகதித்வம். அபரிமித பலார்த்திகளாகிற ஸம்யக்ஜ்ஞாநத்துடன் கூடினவர்கள், பரிமித பலரூபமான ப்ரயோஜநாந்தரங்களைக் கொடுக்கும் தேவதாந்தரங்களை ஸேவிக்க மாட்டார்களாகையால், "ப்ரஹ்மாணம் ஶிதிகண்ணஞ்ச யாஶ்சாந்யா தேவதாஸ்ம்ருதா:। ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்" ॥ என்கிற ப்ரமாணத்தை இங்கே ஸ்மரிக்கவேண்டும். ஆதலால், இவன் அபேக்ஷித்த பலத்துக்கு ப்ராபகரெனத் தேவதாந்தரங்களைப்பற்றி இவனுக்கு யோஜனையுண்டாகக் கூடாதாகையால் ஶரண்யாந்தர வைமுக்யமும், ப்ரயோஜநாந்தர வைமுக்யத்தால் அர்த்தஸித்தமாய் அநந்யகதித்வத்தில் அந்தர்கதம். இந்த ஶரண்

யாந்தர வைமுக்யம் தேவதாந்தரங்களும் தனையொக்கப் பகவத் பாரதந்த்ரர் எனும் நிச்சயத்தாலும், அவர்கள் தரக்கூடிய பலாந்தரங்களில் வைமுக்யத்தாலும் ஸித்தம். தீவ்ரமான முமுக்ஷுத்வமன்றிக்கே, தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தை ப்ரார்த்திப்பதால், தேஹாநுவ்ருத்தியாகின்ற ப்ரயோஜநாந்தரம் ஸம்பவிக்கின்றதேயென்றாலோ, அதனால், தேஹாவஸாநம் வரையில் பலம் விளம்பிக்குமே தவிர மோக்ஷம் தவிராது. இது ஐஹிகமான ப்ரயோஜநாந்தரம். இதன் ஸம்பந்தத்தால் அநந்யகதித்வமெனும் அதிகாரம் போகாது. ஆமுஷ்மிகரூபமான ப்ரயோஜநாந்தர ஸ்பர்ஶம் அதிகார ஹாநியை உண்டாக்கிவிடும். காகாஸுர வ்ருத்தாந்தத்தில், "ஸ பித்ரா ச பரித்யக்த: ஸுரைஶ்ச ஸமஹர்ஷிபி: । த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத: ॥" "பிதாவினாலும், இதர தேவர்களாலும், மஹர்ஷிகளாலும், அவன் கைவிடப்பட்டவனாய்க்கொண்டு, மூன்று லோகங்களிலும் தனக்கோர் ரக்ஷகரைத் தேடிச் சுற்றிவிட்டு, அந்த ஸ்ரீராமனையே ஶரணமாக அடைந்தான்" என்றிருப்பதில், பிதா முதலானவர்களால் கைவிடப்பட்டதால் ஶரண்யாந்தர வைமுக்யமும், அவனையே ஶரணமடைந்தானென்பதால் ஆகிஞ்சந்யமும் ஸூசிதமாயிற்று. இன்னும், "அகிஞ்சநோऽநந்யகதி:", என்று ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரத்திலும், "அநாகதாநந்தகால ஸமீக்ஷயாபி அத்ருஷ்டஸந்தாரோபாய: தஸ்யைவ பாதாரவிந்தயுகளே ஶரணாகதத்வே அநந்ய கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநாந்தரம் நாஸ்தீதி மந்வாந:", "இனி வரப்போகின்ற எல்லையற்ற காலங்களைப்பற்றி யோசித்தாலும், ஸம்ஸாரத்தைக் கடக்க ஓர் உபாயத்தைக் காணாதவனாய், அவனை யடையும்பொருட்டு, அவனுடைய திருவடிகளில் பண்ணும் ஶரணாகதியைக்காட்டிலும், ஆயிரம் கோடி கல்பம் வரையிலும் எனக்கு வேறொரு உபாயம் இல்லையென்று எண்ணுகின்றவனாய்", என்று ஸ்ரீரங்க ஸ்ரீவைகுண்ட கத்யங்களிலும், 'புகலொன்றில்லா வடியேன்', என்று நம்மாழ்வார் பாசுரத்திலும், இந்த ப்ரபத்த்யதிகார விஶேஷ மிருக்கின்றபடியை யோசிக்கவேண்டும்.

இவ்வளவதிகாரம் பெற்ருல், இதற்கு ஜாத்யாதி நியமம் இல்லாத படியால் யாவர்க்கும் இதில் அதிகாரம் உண்டென்பது ஸ்புஷ்டம். இவ்வர்த்தங்களைப் பின்வருகிற ஶ்லோகத்தால் க்ரோடீகரிக்கின்ருர்.

“ஶக்த்யாஸௌ ஶக்த்யபாவாத் ப்ரதிஹதகதயா ஶாஸ்த்ரத: பர்யுதாஸாத் காலக்ஷேபாக்ஷமத்வாத் ஸ்புடிதநியதிவஶாத் ஸர்வஸித்தஹேதோ: । ஸக்ருத்ஸித்த்யர்த்திநோ ய: ப்ரதிவிஹிதநிஜாபத்ரயா ஸம்ஶ்ரயந்தே ஸந்த: ஶ்ரீஶம் ஸ்வதந்த்ரப்ரபதநவிதிநா முக்தயே நிஶ்ஶங்கா:” ॥

“பக்தியோகம், ஜ்ஞாநயோகம், கர்மயோகம் இவற்றைப் பற்ற ஸாமர்த்யமில்லாமை, அந்த யோகங்கள் விஷயமான ஜ்ஞாநமில்லாமை, அவற்றைப் பற்றுவதில் ஶாஸ்த்ரம் விதித்தபடி ஜாதிகுணுதிகளின் இன்மையால் சாஸ்த்ரம் இடங்கொடுக்காமை, பலம் விளம்பிப்பதை ஸஹியாமை, என்று, அத்ருஷ்டவஶத்தால் முமுக்ஷுக்களுக்கு ஸம்பவிக்கின்ற நாலு அதிகாரங்களில், ஒவ்வொன்றின் ஸம்பந்தத்தாலும், இரண்டிரண்டினுடைய ஸம்பந்தத்தாலும், மும்மூன்றின் ஸம்பந்தத்தாலும், நான்கினுடைய ஸம்பந்தத்தாலும், பதினைந்து ப்ரகாரமாகப் பேதிக்கின்ற ஸ்வாதிகாரத்தையுடைய ஸம்யக்ந்யாஸநிரூபணத்தில் ஸமர்த்தரான மஹான்கள், தங்கட்கு ஆகிஞ்சந்யம் ஸித்தமென்று மஹாவிஶ்வாஸத்துடன் கூடினவர்களாய், முக்தியின்பொருட்டு லக்ஷ்மீகாந்தனை ஸ்வதந்த்ர ப்ரபத்யநுஷ்டாநத்தால் ஆஶ்ரயிக்கின்றனர்.”

அன்றியும் “அந்தணரந்திய ரெல்லையினின்ற வனைத்துலகும், நொந்தவரே முதலாக நடங்கி யனன்னியராய்” எனும் பாசுரத்தினுல், ஸர்வஜாதியர்க்குள்ளும் ஸம்ஸாரத்தால் கஷ்டப்பட்டவரே ப்ரதாநராக, ஶோகாவிஷ்டர்களாயும், ப்ரயோஜநாந்தரங்களில் விமுகராயும் இருப்பவர் யாவரும், தன்னை ஶரணமடையவேண்டுமென்று யாவராலும் அதிக்ரமிக்கக்கூடாத ஸஹஜகாருண்யவிஶிஷ்டனுய் ஈஶ்வரன் நிற்பதை வெளியிடுகின்ருர்.

பத்ராதிபர்.

# ஆர்ய வித்யை.

(தொடர்ச்சி)

இந்த ஸந்தர்ப்பத்தில் ஒரு விஷயம் கவனிக்கவேண்டியதா கிறது. அர்த்தஜ்ஞாநம் பாஷாஜ்ஞாநத்தை அவலம்பித்திருக்கிறது. புத்திக்கு பாஷை, சரீரத்துக்கு ஆஹாரத்தின் ஸ்தாநத்திலிருக் கிறது. ஆஹாரத்தின் ஸாராம்ஶத்தை க்ரஹித்து ஶரீரம் போஷிக் கப்படுவதுபோல், பாஷாரூபமான சப்தங்களின் அர்த்தத்தை க்ர ஹித்து புத்தி விசாலமாகிறது. ஶப்தார்த்த ஸம்பந்தம் நித்யமென் பது நம் பெரியோர்களின் கொள்கை. அந்யர்கள் பாஷை ஸாங்கே திகமென்றும், சப்தத்துக்கும் அர்த்தத்துக்கும் நிஜமான ஸம்பந் தம் ஒன்றும் இல்லையென்றும் அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் அப்படி நினைப்பதற்கு ஒரு ந்யாயமுண்டு. ஒரு அர்த் தத்தைத் தெரிவிக்க ஒரு ஶப்தம் அந்த அர்த்தத்தின் சரீரம்போல் அப்ருதக்ஸித்தமாக உண்டாகிறது. அப்படி உண்டான சப்தத் துக்கும் அதன் அர்த்தத்துக்குமுள்ள ஸம்பந்தம் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. பிறகு அந்த சப்தம் பஹுப்ரகாரமான உச்சாரண ஶக்தியுடைய விவித ஜநங்களால் உச்சரிக்கப்படுவதாலும், இன் னும் பலவித காரணங்களாலும், வெவ்வேறு ரூபத்தை அடை கிறது. அப்படிக்கு ஏற்படும் பிரிவுகள் தான் வெவ்வேறு பாஷைக ளாக லோகத்தில் ப்ரசாரத்தை அடைகின்றன. இவ்விதமாக ஒரே சப்தம் பலவிதமான திரிபுகளை அடைவதால், ஆதியில் ஏற் பட்ட ஶப்தார்த்த ஸம்பந்தத்தை ஜ்ஞாபிக்கக்கூடிய அம்சங்கள் மறைந்துவிடுகின்றன. அவ்விதம் விபரிணாமம் அடைந்த சப்தங் களுக்கும் அவைகளின் அர்த்தங்களுக்கும் ஸம்பந்தமே தெரியா மல் போய்விடுகிறது. அதனால் ஸம்பந்தமில்லையென்றே நினைக்க ஹேது உண்டாகிறது. இம்மாதிரி ஒரு பாஷையில் ஏறக்குறைய எல்லா சப்தங்களுமே உருமாறியிருந்தால், அந்த பாஷையையே பேசுபவர்கள் சப்தார்த்தங்களுக்கு ஸம்பந்தமே கிடையாதென்று

வ்யவஹரிப்பதில் ஒன்றும் ஆச்சர்யமில்லை. இதற்கு சில உதாஹரணங்கள் கூறலாம். 'ஸ்ரீ' என்கிற ஸம்ஸ்க்ருத பதம் தமிழில் 'திரு' என்று மாறியிருக்கிறது. 'ஸ்ரீ' என்பது 'ஸ்ரீயதீதிஸ்ரீ:' என்கிற வ்யுத்பத்தியால் 'ஸ்ரீ' என்கிற தாதுவிலிருந்து நிஷ்பந்நமாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ளுகிறோம். 'திரு' என்கிற தமிழ்ப் பதத்தை எவ்விதமாய்த் தமிழில் வ்யுத்பத்தி பண்ணுகிறது? இப்படியே 'ஜந்மம்' என்கிற ஸம்ஸ்க்ருத பதம் 'சன்னம்' என்றும், 'லக்ஷ்யம்' என்பது 'இலக்கு' என்றும், 'இலக்கியம்' என்றும், 'த்யூதம்' என்பது 'சூது' என்றும், 'மநுஷ்ய:' என்பது 'மனிதன்', என்றும் திரிபு அடைந்திருக்கின்றன. ஒருவன் மாறுவேஷம் பூண்டால், தன் அந்தரங்க பந்துக்களுக்குக்கூட அடையாளம் தெரியாமற் போய்விடுவதுபோல், பதங்கள் இதர பாஷைகளில் மாறுபாடு அடைவதால், தங்களுடைய அர்த்த சக்தியை ஸூசிப்பிக்க முடியாதவண்ணம் பரிணமத்தை அடைகின்றன. ஸம்ஸ்க்ருதம் தவிர வேறு எல்லா பாஷைகளுக்கும் இதே கதிதான். ஸம்ஸ்க்ருதம் ஒரு பாஷை தான் சப்தார்த்த ஸம்பந்தத்தை இன்னமும் தெளிவாய்த் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. அதில் தான் ஒவ்வொரு சப்தமும் க்ரியாவாசியான தாதுவிலிருந்து நிஷ்பந்நமாயிருக்கிறதென்பதைக் காட்டக்கூடியதாயிருக்கிறது. இதனால் அது ஆதி பாஷை என்று ஏற்படுவதுடன், அதன் சப்தங்கள் அர்த்தத்துக்கு அவ்யவஹித ஸம்பந்தமுடையவைகளானதால் அர்த்தஜ்ஞானம் அதிசீக்ரமாய் ஏற்படுவதற்கு அந்த பாஷையே முக்ய ஸஹகாரி யென்றும் நிச்சயிக்கவேண்டியதாயிருக்கிறது.

சப்த சக்தியை நம் பெரியோர்கள் பூர்ணமாய் அறிந்திருந்தார்கள் என்றும், அர்த்தபோதம் நமக்கு உண்டாக்குவது மாத்திரமல்லாமல், ப்ரபலமான க்ரியா நிஷ்பத்திகளும் சப்தப்ரயோகத்தால் ஸாதிக்கக்கூடுமென்றும், அவ்விதமே நம் பெரியோர்கள் ஸாதித்துவந்தார்கள் என்றும், ஸம்ஸ்க்ருத பாஷையில் அநாதியாய் ஏற்பட்டிருக்கும் மந்த்ர சாஸ்த்ரங்கள் முதலியவைகளால் ஸ்பஷ்டமாகிறது. இது காரணமாகத் தான் வேதங்களுக்கு ஸ்வதஸ்ஸித்தமாயிருக்கும் அர்த்த கௌரவத்தோடு சப்தாநுபூர்விக்

கும், ஸ்வரவர்ண க்ரமத்துக்கும், அந்யாத்ருசமான குணம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு விதையிலிருந்து உத்பத்தியாகும் மரத்தில் புஷ்பங்கள் புஷ்பித்து, அந்தப் புஷ்பங்களே வாக விசேஷத்தால் பலங்களாகப் பரிணமிப்பதுபோல், பகவானுடைய ஸங்கல்பத்தினுல் சப்தப்ருஹ்மமாகிய வேதங்கள் வெளியிடப்பட்டு, அவைகளின் பாவத்தை அநுஸரித்தே ஜகத்ஸ்ருஷ்டி ஏற்பட்டிருக்கிறது. சப்தத்தின் ஸ்வரூபத்தையும் சக்தியையும் யதாவத்தாய் நம் பெரியோர்கள் அறிந்திருந்தபடியால் தான், அவர்கள் சப்தாத்பநத்தை முக்யமான கர்மமாக விதித்து, அதை அநுஷ்டிக்காமற் போவதால் ஏற்படும் ப்ரத்யவாயத்தையும் கூறியிருக்கிருர்கள். சப்தஸ்வரூபத்தை அறிய வல்லமையில்லாத அந்ய தேசத்தார்க்கும், அவர்களிடமே குருகுலவாஸம் பண்ணித் திருப்தியடைந்திருப்பவர்களுக்கும், இம்மாதிரி சப்தத்துக்கு நம் பெரியோர்கள் கல்பித்திருக்கும் கௌரவம் ஸரியல்லவென்றும், அது ப்ரமத்தினுலோ, மோச எண்ணத்துடனே, ஸங்கேதமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் அபிப்பிராயம் இருந்தபோதிலும், அவ்வபிப்பிராயம் விபரீதமென்பது ப்ரத்யக்ஷமாய் நிரூபிக்கக்கூடியதாயிருக்கிறது.

இதையெல்லாம் யோசிக்குமிடத்து, அர்த்த ஜ்ஞாநம் ஸம்பாதிப்பதற்கு விஷயந்தான் முக்யமென்றும், பாஷை ப்ரதாநமில்லையென்றும், எந்த பாஷையை வேண்டுமாலுைம் அப்யஸித்து ஜ்ஞாநம் ஸம்பாதித்துக் கொள்ளலாமென்றும், இன்ன பாஷை தான் இன்ன விஷயத்துக்கு அல்லது இன்ன அதிகாரிகளுக்கென்று நியாயம் இல்லை யென்றும் சொல்வது யுக்தமல்ல. ஜிஜ்ஞாஸையுடையவன் ஸம்ஸ்க்ருதத்தை அநாதரம் பண்ணி, பாஷாந்தரங்களைக்கொண்டு ஜ்ஞாநம் ஸம்பாதிக்க யத்தனிப்பது, பசியினுல் வருந்துகிறவன் ஸித்தமாயிருக்கும் ஷட்ரஸோபேதமான ம்ருஷ்டாந்நத்தைத் தள்ளிவிட்டு பேய்க்கரும்பைக் கடித்து க்ஷுச்சாந்தி பண்ணிக்கொள்ள முயற்சிப்பதுபோல் ஆகிறது.

மேலும் 'ஆர்த்தகஸ்ய க்ஷம்ஹா க்ஷாமோதராயஸ்ய இவ ஸூதஃ' என்று கவி சொன்னபடி அர்த்தமே தனக்கு ப்ரியதமமான ரூபத்தை எடுத்துக்கொண்டு ஆவிர்ப்பவித்தாப்போல், மஹர்ஷிகளுடைய வாக்குகளிலிருந்து நிரர்க்களமாய் ப்ரவஹித்திருக்கும் ரஸபரிதமான திவ்யஸூக்திகளுக்கு ஸமாநமாய் ஹ்ருதயங்

கமமான க்ரந்தங்கள் வேறெங்கே இருக்கக்கூடும்? ஆகையால் ஸர்வோத்க்ருஷ்டமான ஆர்யபாஷையைத் தவிர்த்து, வேறு எந்த பாஷையை அவலம்பித்தாலும், ஆர்ய புத்திக்கு ஸமுசிதமான ஸம்ஸ்காரம் ஏற்படாதென்பது தீர்மானம். ஆர்யமநஃபரிபாகமும் தகுந்த ப்ரகர்ஷத்தை அடையமாட்டாது என்பதும் நிச்சயம்.

ஆனால் இப்போது சிரகாலமாய் ஆர்யபாஷாப்ரசாரம் குறைவுபட்டு, அப்பாஷையின் தத்வமே இன்னதென்று அறியப் படாமலிருப்பதால், அதை முன்போல் மறுபடியும் ஸர்வோப ஜீவ்யமாக்குவது அஸாத்யமென்று சங்கை உண்டாகக்கூடும். ஆனால் ஆதிகவி முதலான மஹர்ஷிகளின் க்ரந்தங்களில் ஆர்ய பாஷை இன்னும் ஜீவித்துக்கொண்டிருக்கிறபடியால், அந்த க்ரந் தங்களை அவலம்பித்துக் கொஞ்சங் கொஞ்சமாய் ஆர்ய பாஷையை மறுபடியும் ஸந்துக்ஷணம் பண்ணக்கூடுமென்று அப்பாஷையின் மஹிமையையும், அந்த க்ரந்தங்களின் குணங்களையும் அறிந்த ஸூக்ஷ்மதர்சிகளுக்கு அநுபவஸித்தமாகும். இவ்விதமாக ஆர்ய பாஷாப்ரசார முண்டாக்கி, அப்பாஷையின் நிஜமான ப்ரணா டியை வித்யார்த்திகளுக்கு ப்ரதர்சநம் பண்ணி, அதில் அவர்கள் நிஷ்ணாதர்களாய், அதில் ஸர்வ வ்யவஹாரங்களும் நடத்த யோக் யர்களாகத் தேர்ச்சியடைவிப்பது ஆர்ய வித்யாப்ரவசநத்தின் ப்ரதம பீடிகை. ஸம்ஸ்க்ருத பாஷாஜ்ஞாநம் ஸரியாய் ப்ரதிஷ்டி தமாய்விட்டால், அர்த்தஜ்ஞாநம் கூடவே ஸித்தித்துவிடும் என்ப தற்கு ஆக்ஷேபமில்லை. ஸரியான அர்த்தஜ்ஞாநம் ஏற்பட்டால் சீலவ்ருத்தங்கள் பரிஷ்கரிக்கப்படு மென்பதற்கும் ஸந்தேகமில்லை. இதனுடன் யமநியமாத்யநுஷ்டாநங்களும் ஸரஸமாக அமையும். இவ் வெல்லா ப்ரகாரங்களாலும் புத்தி, க்ரமேண விசுத்தரூப மாய் மநஸ்ஸும் நிர்மலமாய், விவேகம் மேன்மேலும் வ்ருத்தி யடைய ஆஸ்பதமுண்டாகிறது. விவேகவிருத்திக் கநுகூலமாய் யதார்த்தமான பகவத்பக்தியும் ஸித்திக்கிறது. அதனால் ஒருவன் பகவத்ப்ரஸாதத்துக்குப் பாத்ரமாய், ஸர்வ ச்ரேயஸ்ஸுகளுக்கும் பாஜநமாகிறான். ஆகையால் இவ்வரிசையாக ஆர்யவித்யை நமக்கு ஸர்வ ப்ரகாரமான ஸத்ஸம்ஸ்காரத்தை உண்டாக்கி, பரமபுரு ஷார்த்தத்துக்கு யோகயர்களாக்குகிறதென்பது தீர்மானம்.

ஆனால் இக்காலத்தில் ஸம்பவித்திருக்கும் பல விதமான அஸௌகர்யங்களையும் குளறுபடிகளையும் உத்தேசித்து, ஆர்ய

வித்யா ப்ரவசநோபாயம் எவ்விதமென்பதைப்பற்றி மிகுந்த சிந்தைக்கு இடமுண்டாகிறது. ராஜபாஷையை அப்யஸிக்கவேண்டிய அவச்யத்தையும், வ்ருத்தி ஸம்பாதித்துக்கொள்வதில் இருக்கும் நிர்ப்பந்தத்தையும், நம் தேசத்தில் ஏற்பட்டிருக்கும் மதபேதங்களையும் யோசித்து, நம்மில் பலர் ஆர்ய வித்யாப்ரவசநம் இந்தக் காலத்துக்கு யுக்தமல்ல என்கிறார்கள். இப்போது ஸாத்யமுமல்லவென்று நிராசையாகக் கைவிடுகிறார்கள். ஆனால் வஸ்துஸ்திதியை மட்டில் செம்மையாய்ப் பர்யாலோசனை செய்யும்பக்ஷத்தில், நம்முடைய தத்கால நிலைமையாகிய அநிர்வசநீயமான [illegible]யானது, நாம் ஆர்ய வித்யையையும் ஆர்யபாஷையையும் கைவிட்டதாலொழிய வேறில்லையென்றும், இன்னும் எவ்வளவுக் கெவ்வளவு இந்த அநாதரம் வ்ருத்தியாகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நம்முடைய தைந்யமும் விருத்தியடையுமென்றும், இந்த அநாதரத்தை மாற்றி எவ்வளவு சீக்ரமாய் நம்முடைய ஸ்வவித்யையை அவலம்பிக்க முயற்சி செய்கிறோமோ, அவ்வளவு சீக்ரமாய் நமக்கு [illegible] நிவ்ருத்தி உண்டாகுமென்றும் புத்திமான்களுக்குப் புலப்படும். ஆகையால் ஆர்ய வித்யா ப்ரவசநத்துக்கு எவ்விதமான இடையூறுகள் இருந்தபோதிலும், அவைகளை எப்பாடுபட்டாவது விலக்கி, நாம் ஏகோபித்து அதை ஸாதிக்கவேண்டியது நம் முதற் கடமையாக நிச்சயித்துக்கொள்ளவேண்டியது. அப்படிப்பட்ட உறுதியும், அதற்கநுகுணமான ஆர்த்தியும், ஆர்ய வம்சத்தில் பிறந்திருக்கும் நமக்கு ஏற்பட்டு விட்டால், அது விஷயத்தில் பகவானுக்கு க்ருபை உண்டாகி நாம் இஷ்டஸித்தி அடைவோம் என்பது உண்மையே.

விசாரிக்குமிடத்து, நாம் அஸௌகரியங்களாகவும் உபரோதங்களாகவும் நினைக்கும் அம்சங்கள் அவ்வளவு பெரிதல்லவென்றும், அவைகளையெல்லாம் நாம் எளிதில் விலக்கி ஸரியான வித்யாபத்ததி திருத்திக்கொள்ளலாமென்றும் நினைக்க இடமுண்டாகிறது. அதை இப்போது விவரிக்க இடமில்லாமையால் பின்பு விசதமாய்க் கூறப்படும்.

(இன்னும் வரும்.)

தி. ஈ. சடகோபாசாரியர்.

# ஜநகநந்தினீ.

மறுநாள்காலை ஒருசாமப் பொழுதில், பெருமாள் நாச்சியார் திருக்கோலம் தரித்துக்கொண்டவராய்த் திருத்தண்காவில் வேதாந்ததேசிகன் ஸந்நிதியில் எழுந்தருளியிருந்தார். வேதபாராயண கோஷ்டியில் கேசவாசார்யரும், மாதவாசார்யரும், பத்மநாபாசார்யரும் ஒரே ஸ்தலத்தில் உட்கார்ந்திருந்தனர். அப்போது பத்மநாபாசார்யர் கேசவாசார்யரைப் பார்த்து, "ஸ்வாமிந்! வரதாசார்யர் தம் குமாரர்க்காகத் தேவரீருடைய கந்நிகையை அபேக்ஷித்ததாகவும், அதற்குத் தேவரீர் ஸம்மதிக்காதபடியால், வரதாசார்யருடைய புத்ரன் ஊரை விட்டுப் போய்விட்டதாகவும், வரதாசார்யர் அதனிமித்தம், கைங்கர்யத்துக்கும் எழுந்தருளாமல், பேராகாதுரராக இருப்பதாகவும் செவியுற்றேன். விஷயமென்ன?" என்று சொன்னார்.

"விஷயம் தேவரீர் ச்ரவணத்துக்கு வந்திருக்க, அதைப்பற்றி அடியேனைக் கேட்பானேன்?" என்றனர் கேசவாசார்யர்.

"அப்படிக்கன்று, ச்ருதமான விஷயம் வாஸ்தவமாவென்று கேட்டபடி" என்றார் மாதவாசார்யர்.

"அடியேன் உக்தியால் அதன் வாஸ்தவம் ஏற்படவில்லையா?" என்றார் கேசவாசார்யர்.

"அந்த ஸம்பந்தத்தில் ஏன் திருவுள்ளக்குறைவு?" என்றனர் பத்மநாபாசார்யர்.

"அது அஸங்கதமாயிருந்தால், வரதாசார்யர் அதைப்பற்றித் தேவரீரிடம் ப்ரார்த்தித்திருக்கமாட்டாரே" என்றனர் மாதவாசார்யர்.

"ஆனால் தாத்ருப்ய ஸம்பந்தத்தைத் தேவரீர்கள் அப்யுபகமம் செய்கின்றாற்போ லிருக்கின்றதே" என்றார் கேசவாசார்யர்.

"வரதாசார்யருடைய புத்ரன் தேவரீர் புத்ரியைத்தவிர மற்றொரு கந்நிகையை மணப்பதில்லையென்று அத்யவஸித்திருக்கின்றான். அவனைப் பெற்றவர் புத்ரப்ரேமையினால் அவ்வித ஸம்பந்தத்தை அபேக்ஷிக்கின்றார்கள். த்ராவிடதேசத்தில் அது ஆசாரத்திலிருக்கின்றது. ஆனபடியால் தேவரீர் ஸஹோதரி புத்ரன் விஷயத்தில் ஈஷத் க்ருபை பண்ணக்கூடாதா?" என்றார் பத்மநாபாசார்யர்.

"ஆனால் தேவரீர்கள் இந்த ரூபமான விவாஹ விஷயத்தில் யுக்தாயுக்தவிசாரம் செய்து நிர்த்தாரணம் செய்துவிட்டதாக யோசிக்கின்றேன்" என்று சொன்னார் கேசவாசார்யர்.

"அவர்கள் கஷ்டப்படுகின்றார்களென்றும், விவாஹம் நடந்தால் மிகுந்த வித்யாஸம் தென்படவில்லை யென்றும், யோசித்தோம். தர்மசாஸ்த்ர நிஷேதத்துக்குத் தேசாசாரம் பரிஹாரமெனவும் நினைத்தோம்" என்று சொன்னார் பத்மநாபாசார்யர்.

"ஸஹோதரி கஷ்டம் அடியேனுக்குத் தெரியாதா? அவளும் வரதாசார்யரும் வருந்தினால், தேவரீர்கள் வருந்திய அளவு அடியேன் வருந்தமாட்டேனோ? சாஸ்த்ர நிஷேதத்தை ஒப்புக்கொண்டதே: "𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌤𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 । 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌾𑌨𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌹𑌾𑌰𑍍𑌹𑌸𑌿" ॥ எனும் பகவத்வசநத்தை ஸ்மரித்ததோ? தேசாசாரமென்று சொன்னது ஶிஷ்டாசாரமெனத் தக்கதோ? ஶிஷ்டாசாரம் இதை ஸம்மதித்தது எங்கேயாவது தேவரீர்கள் கண்டதுண்டோ? அடியேன் தேசாசாரமென்பதை அநுஷ்டித்துவிட்டால், ஶிஷ்டரெனப் பெயர்கொண்டவர்கள் ஶாஸ்த்ரவிப்ரலம்பித்வத்தை ஸ்வவிஷயத்தில் கொண்டாடுகின்றதில்லை யென்று தேவரீர்களே சொல்ல நேரிடாதோ?" என்று சொன்னார் கேசவாசார்யர்.

“தேவரீர் கந்நிகைக்கு விவாஹம் விளம்பிக்கின்றதே. அதைப் பற்றித் தேவரீர் யோசித்துத்தா னிருக்கவேண்டும். வரதாசார்யர் குமாரர்க்கும் கொடுக்கத் தேவரீர் ஸம்மதிக்கவில்லையே. குழந்தையை எவ்விடம் தானம் செய்ய எண்ணியிருக்கின்றது?” என்று சொன்னார் மாதவாசார்யர்.

“தானம் செய்ய அடியேன் ஸித்தமாயிருக்கின்றேன். ப்ரதிக்ரஹீதாவைத் தான் காணவில்லை. அடியேனுக்கும் அதனிமித்தமாகத் தேசாடநம் செய்யச் சக்தியில்லை. அடியேனைக்காட்டிலும் ஸமர்த்தர்களாயிருக்கும் தேவரீர்கள் அடியேனுக்கு ஸஹாயம் செய்யக்கூடாதோ” என்றனர் கேசவாசார்யர்.

“அடியோங்கள் விசாரிக்கின்றோம்.” என்றனர் பத்மநாபாசார்யர். இதற்குள் திருச்சிந்நம் ஊதிவிட்டார்கள். வரதன் தேசிகன் ஸந்நிதியை விட்டு எழுந்தருளிவிட்டார். மேல்விவரித்தபடி ஸம்பாஷித்த மூவரும் கைங்கர்யார்த்தம் வேத கோஷ்டியை அலங்கரித்தனர்.

“ஜயதி தைவிகம் ஜந்மவ்யாஜ: ச்ரியத ஸம்ஸ்ரா ஸஷ்வதஸ்த்ருஹி” - இந்த ச்லோகார்த்தம் ஆறுவது திருநாள் காலையில் எவனுக்கு மனம்படாதோ, அவன் ஜந்மம் வ்ருதா. பெருமாளை ஸேவித்துவிட்டு அவன் தான் இவன் என்றெண்ணாத கன்னெஞ்சும் இருக்குமோ? இப்போது, “யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே” எனும் ச்ருத்யர்த்தம் இவனிடந்தான் பொருந்தும் என்று யோசிக்க வேண்டாம்; ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்’ எனும் தர்மங்களால் நிரூபிக்கப்பட்ட ஸ்வரூபவான் இவன் தானென்றும் எண்ணவேண்டாம்; ‘யதோ வாசோ நிவர்த்தந்தே’ என்று அவனைப்பற்றி நினைத்துப் பயம் கொள்ளவேண்டாம்; அவன் ஸ்வரூபம் அஸ்மதாதிகளுக்கு எப்படித் தெரியுமென்று வ்யஸநப்படவும் வேண்டாம். ஒவ்வோருயிரும் யாவர் கண்கட்கு மிலக்கான வெம்பெருமானைத் தயிதனென்றல்லோ அப்போது கொள்ளவேண்டும். இப்போது நம்முன் ஸேவை ஸாதிக்கும் ஸுந்தர விக்ரஹத்தை ப்ருந்தாவநத்தில் தர்சித்த வ்ரஜாங்கனைகள் அவ்வண்ண மன்றோ

ஸம்புத்தி செய்தார்கள். விஷ்ணுராதனும் ஸ்ரீ பாதுகரைப்பார்த்து, ‘க்ருஷ்ணம் விது: பரம் காந்தம் ந து ப்ரஹ்மதயா முநே’ என்று சொன்னானன்றோ? அவனைக் கேவலம் காந்தனு யெண்ணினர் கள். என் அவர் ப்ரஹ்மமென்று எண்ணவேண்டும்? ப்ரஹ்மம் யாதென்றால், ‘யதோ வா இமாநி’ என்றாரம்பித்து, ‘தத்விஜிஜ்ஞா ஸஸ்வ தத் ப்ரஹ்மேதி’ என்று முடியும் ச்ருத்யர்த்தம் விசாரித் தன்றோ அது எற்படும்? அதற்காக ‘ஜந்மாத்யஸ்ய யத:’ என் கிற ஸூத்ர பாஷ்யமும் காலக்ஷேபம் செய்யவேண்டு மன்றோ? இப்படி ஜகத்காரணனென்றும், அந்தர்யாமியென்றும், அம்ருத ப்ரதனென்றும், பரமம் மஹேச்வரனென்றும், பரப்ரஹ்மமென் றும் அறியவல்லவர் அறியட்டும். கோபீஜநவல்லபன் தன்னைக் காந்தனுய் வரித்தவர்க்கு அந்தக் கஷ்டமெல்லாம் வேண்டாவாம். அவனைத் தயிதனென்றும் காந்தனென்றும் அடைந்தவர்க்குத் ‘தய்’ எனும் தாதுவின் அர்த்தத்தால் ஸித்தித்த பரமக்ருபையை அவனே பண்ணக் காத்திருக்கின்றான். இவ்வண்ணம் பகவான் ஸந்நிதிவீதியி லெழுந்தருளவே, “அவன்தான் இக்கச்சியூரில் அவ தரித்தான். அதனால் அவ்வூர் உயர்ந்தது. மஹாலக்ஷ்மியும் அந் தக் காரணத்தால் அந்நகரத்தை விடாமல் அலங்கரித்து நிற்கின் றாள்” என்றல்லோ அவனழகில் ஈடுபட்ட ஜநங்கள் சிந்திக்க வேண்டும். ‘ந்ருணாம் நி:ச்ரேயஸார்த்தாய வ்யக்திர் பகவதோ ந்ருப’ எனும் வண்ணம், தர்சிக்கப்பட்டவர்க்குப் பரமபுருஷார்த் தப்ரதனான கோபாலனுய் வரதன் ஸேவை ஸாதிக்கின்றான்.

“நீரகத்தாய் நெடுவரையி னுச்சிமேலாய்
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்தகச்சி
யூரகத்தாய் ஒண்துறைநீர் வெஃகாவுள்ளாய்
உள்ளுவா ருள்ளத்தாய் உலகமேத்தும்
காரகத்தாய் கார்வானத் துள்ளாய்கள்வா
காமருபூங் காவிரியின் தென்பால்மன்னு
பேரகத்தாய் பேராதென் னெஞ்சினுள்ளாய்
பெருமானுன் திருவடியே பேணினேனே”.

எனும் வண்ணம் நெடுவரையின் உச்சி மேலோன் கச்சியில் பலவுருவாய் நிறைந்து நின்று, பின் உள்ளுவார் உள்ளத்தானாகி, அங்கும் பேராதிருக்கும் திருவுருவைக் கொள்ளக் கண்ட ஜநங்கள் கோபீஜநபாவத்தை மநஸ்ஸால் அடைந்து,

கல்லெடுத்துக் கன்மாரி காத்தாயென்றும்
  காமருபூங் கச்சியூ ரகத்தாயென்றும்
வில்லிறுத்து மெல்லியள்தோள் தோய்ந்தாயென்றும்
  வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தேயென்றும்
மல்லடர்த்து மல்லரையன் றட்டாயென்றும்
  மாகீண்ட கைத்தலத்தென் மைந்தாவென்றும்
சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லேயென்று
  துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே.

எனும் வண்ணம் மனமுருகப்போகாதோ? மற்றவர் அநுபவம் எங்ஙனமாகிலு மிருக்கட்டும். ஜநகநந்திநி இவ்வண்ணமெல்லாம் பகவானைக்கண்டு சிந்தித்தாள்; உட்கொண்டாள்; அவ்விடம் விட்டுப் பேரானை யநுபவித்தாள். ‘அநிமேஷநிரீக்ஷணீய[illegible] அஜஹுஸ் ஸமயே ந [illegible]விரஹஸ்திதே।’ என்று தேசிகன் ஸாதித்தது அவளுக்குப் பலித்தது. ‘[illegible] ஸம்ஸ நாஸா [illegible] [illegible] ॥’ என்று கோபாலவிம்சதி ச்லோகத்தை அநுஸந்தித்தனள்.

பெருமாள் மண்டபமேற எழுந்தருளித் திரும்புங்கால், மீளவும் ஸந்நிதி வீதி யலங்கரித்தபோது மலர்வர்க்கம் வாடி, நீண்ட மென்மாலைத் தோளசையவும், ஸ்ரீபாதம் தாங்கியவர் அடிவைப்பால் கிளம்பியுயர்ந்த வீதியின் ரேணுக்களால் மலினமடைந்த கொண்டையும், திருமேனியும், ஸேவிப்பவர்களுடைய த்ருஷ்டிகளையும் உள்ளங்களையும் கவரவும், எம்பெருமான் வேகமே நடப்பதை நோக்கி, நம் கதாநாயகி “இந்தப் பாக்யம் எனக்கருளிய லோகநாதன் இதன் மேல் என்ன பாக்யம் தான் தரப்போகின்றான்” எனச் சிந்தித்து நின்றனள்.

அவள் சிந்தித்தவண்ணம், அவளுக்கு அநுக்ரஹிக்க ஸங்கல்பித்த மஹா தயாதீபன், அயோத்யா ஜநங்கள், “[illegible] ॥” என ப்ரார்த்தித்துப் பெருத பாக்யத்தை அவளுக்குத் தரக் கருதினன். அவ்வண்ணம் பெருமாளை அன்று ஸாயங்காலம் ஸந்நிதி வீதியில் ஜநகநந்தினி தர்ஸித்தனள். நாற்புறமும் சூழ்ந்து நடந்த ஜநக்கூட்டமாகின்ற ஸமுத்ரத்தின்மீது, ஜலத்தின் மேல் நிப்’சலமாய் ஸஞ்சரிக்கும் நாவமெனக் கஜேந்த்ரன் நிப்’சலமாய் வஹிக்கப்பட்டானுதலால், பெருமாள்ஸேவை யாவர்க்கும் த்ருப்தியாய் லபித்தது.

ஸாயங்காலம் ஸந்நிதிக்குச் செல்வதற்கு முன், கேசவாசார்யர் ஜநகநந்தினியை அழைத்து, “குழந்தாய்! உனக்கு விவாஹோசிதகாலம் கடக்கின்றது. காலதேச வைகுண்யத்தால் தக்க வரன் கிடைப்பது கஷ்டமாயிருக்கின்றது. உனக்குப் பன்னிரண்டு பிராயம் முடியப்போகின்றது. உனக்கு ஐஹிக விஷயங்களிலும் ஸாமாந்யமான பெண்களைக்காட்டிலும் ஜ்ஞாநம் விசேஷித்திருக்கின்றது. என்னுடைய ப்ரயத்நம் உன்னுடைய க்ஷேமத்தை முக்ய லக்ஷ்யமாயுடையது. ஆதலால் உனது பாவம் இருக்கின்றபடியைச் சொன்னுபானல், அதற்கு அநுகூலமாக நானும் ப்ரயத்நம் செய்கின்றேன்” என்று சொன்னர்.

இதைக்கேட்டு ஜநகநந்தினியும் “அப்பா! அடியேனை இப்படித் தேவரீர் கேட்கலாமோ? அடியேன் ப்ரஹ்மகுலத்தில் ஜநித்தேன்; அதிலும் தேவரீர் புத்ரியாகப் பிறந்தேன். அடியேனுக்கு அபாந்தவக்ருதமான ஸ்நேஹப்ரவ்ருத்தி யுண்டாகமாட்டாதே. அடியேனுக்கு விவாஹப்ரயுக்தமாக யாதொரு வ்யக்தி விசேஷத்திலும் பாவம் உதிக்கவில்லை. அது தேவரீருடைய திருவுள்ளத்தை அநுஸரித்துப் பின்னுல் ஏற்படும்” என்று சொன்னுள்.

“குழந்தாய்! ஸ்ரீநிவாஸன் உன்னையே விவாஹம் செய்துகொள்வதாக நிச்சயம் செய்துகொண்டு, அதற்கு நான் ஸம்ம

திக்காத காரணத்தினுல், இந்த ஊரைவிட்டு எங்கேயோ போய் விட்டானும். அதனிமித்தம் உன் அத்தையும் அவள் பர்த்தாவும் வ்யஸநத்தில் மூழ்கியிருக்கின்முர்கள். எனக்கும் அதைப்பற்றி வருத்தமாயிருக்கின்றது. அவனுக்கு உன்னைத் தாநம் செய்வதில் ஶாஸ்த்ரம் நிஷேதிக்கின்றது. எனக்கும் க்யாதிவிரோதம் உண் டாகும். ஆனுலும் உனக்கு அவனைப் பர்த்தாவாக அடைய விருப் பம் உண்டானல் சொல். உன் க்ஷேமத்தின் பொருட்டு மேற் சொன்ன ப்ரதிபந்தங்களை நான் பாராட்டாமல் விடுகின்றேன்" என்று சொன்னர் கேசவாசார்யர்.

"அப்பா! பந்துத்வப்ரயுக்தமான பரிசயம் தவிர வேறு விதமான விருப்பம் அவனிடம் அடியேனுக்கில்லை. ஆதலால் தேவரீர் வேறு யோசனை செய்து ஶாஸ்த்ரத்தையும் திரஸ்கரிக்க வேண்டாம்; க்யாதிவிரோதமும் ஸம்பாதிக்கவேண்டாம். தேவ ரீர் எந்த வரனைப்பார்த்து அடியேனைத் தாநம் செய்தாலும் ஸரியே; அந்தப் புருஷனையே அடியேன் பர்த்தாவாக விஶ்வஸித்துப் பூஜிக்க ஸித்தமாயிருக்கின்றேன்" என்று ஜநகநந்தினி மொழிந் தாள். கேசவாசார்யர் உடனே ஸந்நிதிக்குச் சென்முர்.

வைசாக உத்ஸவத்தின் விபவம், யானை வாஹநத்தின்மீது வர தன் முரங்கன் வீதி எழுந்தருளிக் கச்சிவீதியில் திரும்பிக் கச் சீஶ்வரன் கோவில் முன்பாகப் பூப்பந்தலின் கீழ் அமர்ந்தகாலை யில் ப்ரகாசிப்பது போல், வேறு அவஸரங்களில் ப்ரகாசிக்கமாட் டாது. அன்றும், பெருமாள் அந்த ராஜவீதியை மெள்ளமெள் ளக் கடந்து, மண்டபத்தின் கீழ்ப்புறமாக ஏகாம்ரேசன் ஆலயத் தின் முன் சென்றபோதன்றே அவ்விபவத்தின் பரமாவதி ஏற் படுகின்றது. அங்கே நடப்பதை ஏசலென்பார். யாரைப் பார்த் துப் பகவான் ஏசவேண்டும்? ஏகாம்ரநாதனை நோக்கி "என்னைப் பார், என்னழகைப்பார்; உன்னைப்பார், உன்னுருவைப்பார்" என்று சொல்லவா தேவாதிராஜன் அங்கு சென்றனன்? இரண்டு நாள் அவன் அங்கேகிச் சங்கரனை ஏசவும், ஒருநாள் அவனை ஏசச்

சங்கரன் பரிவாரத்துடன் விஷ்ணுகாஞ்சிக்குச் செல்லவும், யார் ஏற்பாடு செய்தார்களோ தெரியோம். மந்தமதிகள் களித்துத் தமக்கு உள்ள அறிவையும் இழந்து, பித்தம் தலைக்கேற இவை ஸமயமாகின்றன. ஸ்தலபுராண ப்ரகாரம், தன் அநுக்ரஹத்தை யடைந்த பார்வதிக்கும், அவள் தவம் முடிவுபெற்ற பலனாக வந்து அவளை மணம்புரிந்த த்ரிலோசநனுக்கும், வருஷத்துக்கொருதரம் ஸேவை ஸாதிக்க எழுந்தருளினனென்றால் பொருந்தும். மற்றவையெல்லாம் மநுஷ்யக்ருதம். "ब्रह्मविष्णुशिवाख्यां स संज्ञां याति भगवानेक एव जनार्दनः", என்றும், "ब्रह्मत्वे सृजते विश्वं स्थितौ पालयते पुनः । रुद्ररूपाय कल्पान्ते", என்றும், "[illegible] भगवान् [illegible] । [illegible] करोति," என்றும், ஸ்ரீ விஷ்ணுபுராண வசநங்களை ஆதரித்துத் தேவாதிராஜன் தானே சங்கரனாக அவதரித்த உண்மையை அது தெரியாதவர்க்கு உணர்த்தும்படி ஏகாம்ரநாதன் கோவில் முன் சென்று காட்டுகின்றானெனக்கூடும். இந்த விஷயம் எங்ஙனமாகிலும், ஒரு மாவின் கீழமர்ந்த தேவன்கோவில் உருவமைந்த மண்டபத்தினுள்ளேநிற்கும், கரிமாவின் மேலிருந்த கடவுள் தன்னைக் கண்ணாரக் கண்டுகக்கும் காதல்தன்னால், அத்தெருமாண்ட கூட்டத்தையும், தீவட்டி வெளிச்சத்தையும், மத்தாப்பூவின் மிகுந்த ப்ரகாசத்தையும், மற்ற ஸந்நிவேசத்தையும் ஒருதரம் கண்டவர், வாழ்நாள் முழுவதும் அவற்றை மறக்க முடியாது.

இப்படி ஏசல் என்பது முடிந்தது. பெருமாளும் கங்கைகொண்டான் மண்டபத்தில் எழுந்தருளினர்.

மங்களதீர்த்தக் கரையில் கேசவாசார்யர் போய் உட்கார்ந்தனர். உடனே பத்மநாபாசார்யரும் அதே ஸ்தலத்தில் வந்து உட்கார்ந்தார். அவர் கேசவாசார்யரைப் பார்த்து, "ஸ்வாமிந்! நாவல்பாக்கம் நரஸிம்ஹாசார்யர் உத்ஸவத்துக்கு எழுந்தருளியிருக்கி

ஞர். அவருடைய ஜேஷ்டகுமாரன் வீரராகவனும் வந்திருக்கின்ஞன். அவன் மைஸூர் பாடசாலையில் தர்க்கம் வ்யாகாரணம் இரண்டிலும் நல்ல பாண்டித்யத்தை ஸம்பாதித்துக்கொண்டு இவ்விடம் வந்திருக்கின்ஞன். தேவரீருடைய கந்நிகைக்குத் தக்கவரனுக அடியேனுக்குத் தோற்றுகின்றது" என்று சொன்னுர்.

"பிள்ளையைக் கடாக்ஷித்ததோ?" என்ஞர் கேசவாசார்யர்.

"பிள்ளையைப் பார்த்தேன். அவனுக்கு இருபது, இருபத்திரண்டு வயஸ் இருக்கும். பார்வைக்கு விலக்ஷணமாயும் இருக்கின்ஞன்" என்று சொன்னுர் பத்மநாபாசார்யர்.

"தேவரீருடைய உக்திகள் திருப்தியாயிருக்கின்றன. அந்த ஸ்வாமியோடு இந்த விஷயத்தைப் பற்றி யாதேனும் ப்ரஸ்தாபித்ததுண்டோ?" என்று கேட்டார் கேசவாசார்யர்.

"ஸாக்ஷாத்தாக ப்ரஸ்தாபிக்க வில்லை. பிள்ளையினுடைய யோக்யதையைப் பற்றி ஸம்பாஷிக்கையில், அவனுக்கு க்ரஹஸ்தாஶ்ரமத்தை ஸம்பாதித்துக்கொள்ள யுக்த வயஸ் வந்துவிட்டதாகவும், தகுந்த கந்நிகை நேரிட்டால் விவாஹம் செய்துவிடலாமென்றும் அந்த ஸ்வாமி அபிப்ராயப்படுகின்ஞர்" என்றனர் பத்மநாபாசார்யர்.

"நாளை மத்யாஹ்நம், அடியேனுடைய க்ரஹத்துக்கு க்ருபை செய்து எழுந்தருளினுல், இரண்டுபேரும் அந்த ஸ்வாமியைப் போய்த் தண்டன் ஸமர்ப்பித்து விஷயத்தை ப்ரஸ்தாபிப்போம்" என்று சொல்லி முடித்தார் கேசவாசார்யர்.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

# ப்ராஹ்மண்ய ஸ்வரூபம்.

## மதங்கோபாக்யாநம்.

“𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌮𑌾𑌸𑍀𑌤𑍍, 𑌬𑌾𑌹𑍂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌃 𑌕𑍃𑌤𑌃, 𑌊𑌰𑍂 𑌤𑌦𑌸𑍍𑌯 𑌯𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌃, 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌽𑌜𑌾𑌯𑌤,” என்று ஶ்ருதியிலும், ‘𑌮𑍁𑌖𑌬𑌾𑌹𑍂𑌰𑍁𑌪𑌜𑍍𑌜𑌾𑌨𑌾𑌂’, என்று மங்வாதி ஸ்ம்ருதிகளிலும், ‘𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌂,’ என்று கீதாதிகளிலும், ஜந்மஸித்தங்களாகச் சொல்லப்பட்ட ப்ராஹ்மண்யத்தை, ஏதோ சில ஜ்ஞாநாநுஷ்டாநங்களால் அடைய விரும்பி, அப்படியே தாங்கள் அடைந்துவிட்டதாகவும் நினைத்துக்கொண்டு, ப்ராஹ்மணர் என்று பெயர்பூண்டு, சில ப்ராஹ்மணபாஸர்களையும் தங்கள் அந்தேவாஸிகளாக்கி, கீழ்ச்சொன்ன ப்ராஹ்மண்யம் ஸர்வ ஸாதாரண மென்று, ஆங்காங்கு ஸப்ரமாணம் உபந்யஸித்து வரும் அதுநாதந சில மதஸ்தர்களையும், சில நான்காவது வர்ணத்தாரையும், நாம் ஸுப்ரஸித்தமாகப் பார்க்கிறோம். இது விஷயமாய்ப் பஞ்சமவேதமென்று ப்ரஸித்தியடைந்த ஸ்ரீ மஹாபாரதத்தில் ஆநுஶாஸநிக பர்வத்தில், மூன்றுவது அத்யாயத்தில், சொல்லப்பட்டிருக்கும் ஓர் உபாக்யாநத்தையும் இன்னும் ப்ரமாணாந்தரங்களையும் எழுதப்படுகிறது.

மேற்படி அத்யாயத்தில் ஸ்ரீ தர்மபுத்ரர் ஸ்ரீ பீஷ்மரைப் பார்த்துப் “புத்திமத்வம், ஶாஸ்த்ரஜ்ஞாநம், அநுஷ்டாநம், முதலிய ஸத்குணங்களாலும், வயஸ்ஸினாலும், வ்ருதங்களினாலும், உம்மைப் போன்றவர்கள் யாருமில்லை. ஆகையால் தர்மம் தெரிந்தவர்க்குள் ஶ்ரேஷ்டரான உம்மைக் கேட்கின்றேன். க்ஷத்ரியன், வைஶ்யன், ஶூத்ரன் என்னப்படுகிற மூன்று வர்ணத்தாரும் மஹத்தான தபஸ்ஸினாலாவது கர்மத்தினாலாவது சாஸ்த்ரஜ்ஞாநத்தினாலாவது, யாதொரு உபாயத்தினால் ப்ராஹ்மண்யத்தை அடையக்கூடுமோ? அதை எனக்குச் சொல்லவேண்டும்” என்று ப்ரஶ்நம் பண்ணினார்.

அதைக் கேட்ட ஸ்ரீ பீஷ்மர், "ராஜனே! ப்ராஹ்மண்யம் மற்ற மூன்று வர்ணஸ்தரால் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அடைய முடியாதது. அது ஸர்வப்ராணிகளுக்கும் உத்தமமான ஸ்தாநம். அநேக யோநிகளில் பிறந்துபிறந்து ஸம்ஸரிக்கின்ற ஜீவன் புண்ய விசேஷத்தால் ப்ராஹ்மணனாக ஜநிக்கின்றான். இது விஷயத்தில் ஒரு சண்டாளனுக்கும் ஒரு கர்த்தபிக்கும் நடந்த ஸம்வாதத்தைப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள்." என்று சொல்லி அந்த ஸம்வாதத்தை உரைக்கத் தொடங்கினார்.

"ஒரு ப்ராஹ்மணனுக்கு ஸர்வ ஸத்குணாலங்க்ருதனான மதங்கன் என்று ஒரு புத்திர னிருந்தான். அந்தப் புத்திரன், யாகம் செய்வதற்குரிய ஸாமக்ரிகளைச் சேகரிப்பதற்காகப் பிதாவினால் நியமிக்கப்பட்டுக் கோவேறு கழுதைகள் கட்டிய ரதமொன்றின் மேல் ஏறிக்கொண்டு போகையில், அக்கழுதைகளில் ஒன்றை அதன் தாய் காண அதன் மூக்கில் வ்ரணம் உண்டாகும்படி மிகவும் அடித்தான். அதனிடம் மிகவும் அன்புகொண்ட அந்தக் கர்த்தபி மூக்கில் வ்ரணத்துடன் கூடிய அந்தக் கழுதையைப் பார்த்து, மிகவும் க்லேசப்பட்டு, "நீ வருத்தப்படாதே. இவன் சண்டாள னுகையினால் உன்னை அடிக்கின்றான். ப்ராஹ்மண ஜாதியில் பிறந்தவன் ஹிம்ஸை செய்யமாட்டா னென்றும், எல்லா ப்ராணிகளிடத்திலும் ஸ்நேஹத்துடன் இருப்பானென்றும் சொல்லப்படுகிறது. ஸர்வ ப்ராணிகளுக்கும் ஆசார்யனாய் ஹிதத்தைச் சொல்லுகிற அந்தணன் ஹிம்ஸையைச் செய்வானோ? இவனோ பாபம் செய்வதையே ஸ்வபாவமாக உடையவன். ஆகையால் பாலனான உன்னிடத்தில் தயை இல்லாதவனாய்த் தனது சண்டாள ஜாதிக்குரிய தொழிலை அநுஷ்டிக்கின்றான். ஜாதிஸ்வபாவமானது புத்தியைக் கெடுத்துவிடுகின்றது," என்று சொல்லிற்று.

கர்ணகடோரமான அந்த வார்த்தைகளைக் கேட்ட மதங்கன் உடனே ரதத்தை விட்டிறங்கி அத்தாய்க் கழுதையை நோக்கி, "ஓ கர்த்தபி! என்னுடைய தாயானவள் எவனால் தூஷிக்கப்பட்டாள்? எந்தக் காரணத்தினால் என்னைச் சண்டாளனென்று அறிகின்றாய்? எந்தக் காரணத்தினால் என்னுடைய ப்ராஹ்மண்யம் போய்விட்டது? ஓ புத்திமதியான ராஸபி! இவற்றையெல்லாம் ஸத்யமாக எனக் குரைப்பாய்," என்று கேட்டான்.

அதைக்கேட்ட கர்த்தபி, அந்த ப்ராஹ்மணபுத்ரனைப் பார்த்து, "நீ நாவிதனான ஒரு சூத்ரனால் அதிக மதமுள்ள ஒரு ப்ராஹ்மண ஸ்த்ரீயினிடம் உண்டானாய் யாதலால் சண்டாளனாகப் பிறந்தாய். அதனால் உனக்கு ப்ராஹ்மண்யம் போய்விட்டது," என்று சொல்லிற்று.

அதைக் கேட்டு மதங்கன் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான். அங்கு அவன் பிதா அவனைப் பார்த்து, "உன்னை யாகம் செய்யவேண்டிய ஸாமக்ரி ஸம்பாதநத்துக்காக அனுப்பினேன். நீ ஏன் வ்யர்த்தமாகத் திரும்பிவந்தனை? (கச்சித் குசலம் தவ) உனக்கு ஸௌக்யக் குறைவு உண்டாயிற்றா என்ன?" என்று கேட்டார்.

அதற்கு மதங்கன், "ஓ பிதாவே! சண்டாளயோநியில் ஜநித்தவனுக்கும் மற்ற நிஹீநஜாதியில் ஜநித்தவனுக்கும் எப்படி க்ஷேமம் உண்டாகும்? எவனுக்கு எனது தாய் போன்றவள் தாயாகின்றாளோ, அவனுக்கு எவ்விதமாவது ஸௌக்யம் உண்டாமோ? மநுஷ்ய ஜாதியில் பிறவாத திர்யக்கான கழுதையானது நான் ப்ராஹ்மணஸ்த்ரீயினிடம் சூத்ரனுக்குப் பிறந்தவனெனச் சொல்லுகின்றது; ஆகையால், அதனிமித்தம் நான் மஹத்தான தபஸ் செய்யப்போகின்றேன்" என்று சொல்லிவிட்டுத் தபஸ்ஸில் நிலைத்த புத்தியைக் கொண்டவனாய், ஒரு பெருங்காட்டை யடைந்து, கடோரமான தபஸ்ஸை அநுஷ்டித்து, ப்ராஹ்மண்யத்தை ஸுகமாக அடையவெண்ணித் தனது தபஸ்ஸால் தேவர்களுக்கும் தாபத்தை உண்டுபண்ணினான்.

அப்படித் தபஸ் செய்யும் மதங்கனிடம் தேவேந்த்ரன் பிரஸந்நனாகி "நீ மாநுஷ ஸுகங்களை விட்டு எதற்காகத் தபஸ் செய்கின்றாய்? வேண்டிய வரங்களைக் கேள்; தருகின்றேன்," என்று சொல்ல, அவன், "ப்ராஹ்மண்யத்தை அடைய ஆசைப்பட்டுத் தபஸ் செய்கின்றேன். அந்த வரனைக் கொடுத்தீராகில் தபஸ்ஸை விட்டுப் போகின்றேன்" என்று சொன்னான்.

அதற்கு இந்த்ரன், "ஓ மதங்கனே! ஒரு காலத்திலும் உன்னால் அடையக்கூடாத ப்ராஹ்மண்யம் உன்னால் விரும்பப்படுகிறது. மஹத்தான புண்யம் செய்யாதவர்களால் அடையமுடியாத ப்ராஹ்மண்யத்தைக் குறித்து ஆசைகொண்ட துர்புத்தி யடைந்த

நீ தபஸ்ஸினுல் நசித்துவிடுவாய். ஆதலால் தபஸ்ஸை விட்டுவிடு. ஸர்வப்ராணிகளுக்குள் எந்த ப்ராஹ்மண்யம் சிறந்ததோ, எது தபஸ்ஸை அதிக்ரமித்ததோ, தேவாஸுர மநுஷ்யர்களுக்கும் எது பரிசுத்தியைத் தரக்கூடியதோ, அந்த ப்ராஹ்மண்ய விஷயத்தில் ஆசைப்பட்டுத் தபஸ் செய்வதால், நீ நசித்துவிடுவாய். சண்டாள யோநியில் பிறந்த உன்னுல் எவ்வளவு கஷ்டப்பட்டபோதிலும் அந்த ப்ராஹ்மண்யம் அடையத்தக்கதன்று,'' என்று சொன்னுர்.

இதைக் கேட்ட மதங்கன் ப்ராஹ்மண்யத்தில் ஆஸ்தை கொண்டு, ஒற்றைக் காலில் நின்றுகொண்டு நூறு வருஷகாலம் த்ருடமான ஸங்கல்பத்துடன் உக்ரமான தபஸ்ஸைப் பண்ணினுன். மறுபடியும் அவனிடம் இந்த்ரன் ப்ரஸந்நனுகி, "ஓ சிறுவனே! நீ ஒருநாளும் ப்ராஹ்மண்யத்தை அடையப்போகின்றதில்லை. நீ ஸாஹஸம் செய்யாதே. இது உனக்குத் தர்மமன்று. ப்ராஹ்மண்யத்தை அடைய இச்சித்து அமார்க்கத்தில் ப்ரவர்த்தித்து நசித்துவிடுவாய். ஓ துர்புத்தியுடையவனே! இந்த ஜந்மத்தில் உன்னுல் ப்ராஹ்மண்யம் அடைய முடியாதது. நான் அடிக்கடித் தடுத்தும் கேட்காமல் தபஸ்ஸைச் செய்கின்றுய். திர்யக் யோநியில் பிறந்த ஜீவன், மானிட ஜந்மத்தை முதலில் அடையும்போது, சண்டாளனுகவோ சக்கிலியாகவோ பிறக்கின்றுன். பிறகு, ஆயிர வருஷகாலம் அந்தச் சரீரத்தோடு இருந்து, அதன் பிறகு, சூத்ர ஜந்மாவை அடைகின்றுன். சூத்ரஜாதியில் மூவாயிரம் வருஷமிருந்து, வைஶ்யனுய்ப் பிறக்கின்றுன். ஆறுயிரம் வருஷம் வைஶ்யனுயிருந்து, பிறகு க்ஷத்ரியனுய் ஜநிக்கின்றுன். அந்த ஜாதியில் ஆறுயிரம் வருஷங்களிருந்து, பின்பு நிஹீந ப்ராஹ்மண னுகின்றுன். அப்படி ஐந்நூறு வருஷமிருந்து, ஜாபக ப்ராஹ்மணனுய் ஜநிக்கின்றுன். நானூறு வருஷம் வரையில் அந்த ஜந்மத்திலிருந்து, பிறகு ஶ்ரோத்ரிய ப்ராஹ்மணனுய்ப் பிறக்கின்றுன். அந்த ஜந்மத்தில் பகு காலமிருந்து, காமம் க்ரோதம் முதலான சத்ருக்களை ஜயித்து, (ஆத்மஜ்ஞாநத்தை யடைந்து, பக்தியைப் பண்ணி,) மோக்ஷத்தை யடைகிறுன். ஓ மதங்கனே! இவ்விதம் தெரிந்த நான் உன்னை ஏவுகின்றேன். வேறு வரனைக் கேள். ப்ராஹ்மண்யம் உன்னு லடையமுடியாது என்பது ஸுப்ரஸித்தம்'' என்று சொன்னுர்.

தேவேந்த்ரன் இவ்வாறு மொழிந்ததும், அதைக் கேட்காமல் த்ருடாபிஸந்தியோடு ஆயிரம் வருஷம் வரையில் ஒற்றைக்காலை மாத்ரம் பூமியில் வைத்துக்கொண்டு நின்று, மதங்கன் தபஸ்ஸைப் பண்ண, அப்போது ப்ரஸந்நமான இந்த்ரன், முன்போலவே ப்ராஹ்மண்யம் மதங்கனால் அடையமுடியாது என்று சொன்னான்.

அப்போது மதங்கன், "இந்த ஆயிரவருஷ காலம் ஒற்றைக் காலில் நின்றுகொண்டு கடோரமான தபஸ்ஸைப் பண்ணினேனே. ஏன் எனக்கு ப்ராஹ்மண்யத்தைக் கொடுக்கக்கூடாது?" என்று வினவ, இந்த்ரன், "சண்டாளயோநியில் பிறந்தவனால் ஒரு காலத்திலும் ப்ராஹ்மண்யம் அடைய முடியாதது; ஆகையினால் வேறு வரனைக் கேள்; உன்னுடைய தபஸ் வ்யர்த்தமாக வேண்டாம்" என்று சொன்னார்.

அதைக் கேட்ட மதங்கன், அதிக வருத்தத்தோடு கூடினவனாய்க் கயாக்ஷேத்ரத்துக்குப் போய், அங்குஷ்டத்தினால் நின்று கொண்டு, வ்ருதத்தால் சரீரம் எலும்பு சர்மம் இவை மாத்ரம் ஶேஷமாக இருக்கும்படி, நூறு வருஷம் வரையில் உக்ர தபஸ்ஸைச் செய்ய, இந்த்ரன் ப்ரஸந்நனாகி, மதங்கன் கையைப் பிடித்துக்கொண்டு, "ஓ மதங்கனே! ப்ராஹ்மண்யம் உனக்கு விருத்தமானது. அதை நீ அடைய முடியாது. அதை அடைந்தவர்களும், அது காமம் முதலான சத்ருக்களால் சூழப்பட்டிருக்கின்றபடியால், அதை ஸரியாக ரக்ஷித்து ஸுகத்தை யடைகின்றனர். அதை ஸரியாகக் காப்பாற்றாதவர்கள் அதிக துக்கத்தை அடைவார்கள். ஆகையால் ஸர்வப்ராணிகளுடைய யோகக்ஷேமங்களும் ப்ராஹ்மணனிடம் நன்றாக ஏற்றிடப்பட்டிருக்கின்றது. ப்ராஹ்மணர் மூலமாகத் தேவர்களும் பித்ருக்களும் த்ருப்தியைப் பொருந்துகின்றனர். ஸர்வபூதங்களின் மத்யே, ப்ராஹ்மணன் உத்க்ருஷ்டன் எனப்படுகின்றான். ப்ராஹ்மணன் எதெதை இச்சிக்கின்றானோ, அதை அப்படியே செய்கின்றான். அநேகம் யோநிகளில் ஜீவன் ஸஞ்சரித்து மறுபடியும் மறுபடியும் பிறந்து, ஏதேனுமொரு முடிவான ஜந்மத்தில், ப்ராஹ்மண்யத்தை இவ்வுலகில் அடைகின்றான். ஸம்ஸ்காரமற்ற புத்தியுடையவரால் அடையக்கூடாத ப்ராஹ்மண்யத்தில் ஆசையை நீ துறந்து, வேறு வரம் கேள். இந்த வரம் உனக்கு ப்ராப்தமாகாது" என்று சொன்னார்.

அதைக் கேட்ட மதங்கன், "துக்கத்தால் வருந்திய என்னை ஏன் புண்படுத்துகின்றீர்; இறந்துபோன என்னை ஏன் மறுபடியும் கொல்கின்றீர்" என்றனன்.

அதன் பிறகு இந்த்ரன், "ப்ராஹ்மண்யத்தை அடையாமல், அடைய வேண்டுமென்று இச்சிக்கும் உன்பொருட்டு போகிக்கின்றேன்" என்றனர். அதைக்கேட்டு மதங்கன், "கிட்டாத அந்த ப்ராஹ்மண்யமானது மூன்று இதர வர்ணஸ்தரால் அடையக்கூடாததா யிருக்கும்பக்ஷத்தில், அதை அடைந்தும் அதற்கு உசிதமான பமதமாதி குணங்களை வஹிக்காமலும், எப்போதும் அதை ரக்ஷிக்காமலும் விடுகின்ற மநுஷ்யர், பாபிகளெனப்பட்டவரைக் காட்டிலும் மஹாபாபிகள்; துர்லபமான தநத்தை யடைவதைப் போல், துர்லபமான ப்ராஹ்மண்யத்தை யடைந்து எவனொருவன் அதை ஸம்ரக்ஷிக்காமல் நிந்திக்கின்றானோ, அவன் நிஜமாக அந்த மஹாபாபிகளிலும் அதமன். விப்ரத்வம் அடைவது அரிது. அடைந்தும் மஹாகஷ்டத்தால் அது ரக்ஷிக்கத்தக்கது. பெறக்கூடாத அதைப் பெற்று மனிதர் அதை ரக்ஷிக்கின்றாரில்லை. ஓ இந்த்ரனே! நான் அந்த ஒன்றிலேயே ஸந்தோஷிக்கின்றவன். ஸுகதுக்காதிகளைப்பற்றி உதாஸீநன்; பொருளற்றவன்; அஹிம்ஸை, தமம், முதலான குணங்களை ஸேவிப்பவன்; அப்படியிருந்தும் விப்ரத்வத்தை அடைய எப்படித் தகாதவனாகின்றேன்? ஓ புரந்தர! நான் தர்மமறிந்திருந்தும், எனது மாதாவின் தோஷத்தால் இந்த அவஸ்தையை ஏன் அடைந்தேனோ, அது ப்ராசீந கர்ம மன்றோ? நிஜமாகப் புருஷன் தன் ப்ரயத்நத்தால் ப்ராசீந கர்மத்தை அதிக்ரமிக்க அஶக்தன்; ஏனென்றால், நான் ப்ரயத்நபரனாக விருந்தும், ஓ ப்ரபுவே! நான் விப்ரத்வத்தை அடைகின்றேனில்லையே. ஓ தர்மமறிந்தவரே! இது இப்படியானபடியால், நான் உம்மால் அநுக்ரஹிக்கத் தக்கவனானாலும், என்னிடம் கிஞ்சித் ஸுக்ருத மிருந்தாலும், எனக்கு வரம் கொடுப்பீர்," என்றனன்.

பிறகு இந்த்ரன் மதங்கனை வரம் கேட்கும்படி அநுமதி கொடுத்தார். மதங்கனும் இந்த்ரனால் ஏவப்பட்டு "நான் இஷ்டமான ஆகாரத்தையும் விஹாரத்தையும் அடைந்து ஆகாச ஸஞ்சாரியாய் ப்ராஹ்மணர்க்கும் க்ஷத்ரியர்க்கும் விரோதமில்லாமல் பூஜையைப் பெற்று, எனது கீர்த்தி என்றும் அக்ஷயமாயிருக்க